648

648

# ஸன்மார்க்க ப்ரதர்சினீ.

ஓர் இனிய

மாதாந்திர சஞ்சிகை.

# SANMARGA PRADHARSANI.

EDITOR

SASTRA RATNAM THETHIYUR

SUBRAMANIA SASTRIGAL.

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.

Vol. 1. | 1933ஆு நவம்பர்மீ 1உ | No. 3.

காபி ரைட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

வெங்கடேஸ்வர் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.
காக்காத்தோப்புத் தெரு,
மதுரை.

தனிப்பிரதி அணா 2.

கடவுள் துணை.

# ஸன்மார்க்க ப்ரதர்சினீ.

## தமிழ் மாதாந்திரப் பத்திரிகை.

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜனனீ ஸர்வமங்களா /
ஜனக: சங்கரோ தேவ: தம் வந்தே குஞ்சானனம் //

மாலை 1. | மதுரை 1933-ஞ நவம்பர்-மீ 1-உ | மணி 3.

பொருளடக்கம்.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | சிவோத்கர்ஷம் | 75 |
| 2. | ஜாதிபேதம் | 81 |
| 3. | விச்வாமித்ரயாகம். | 85 |
| 4. | ஸ்ரீசங்கரவிஜயம். | 91 |
| 5. | ஸம்ஸார லீலை. | 97 |
| 6. | ஸ்ரீமத் பகவத் கீதை. | 103 |
| 7. | சிகையின் அவசியம். | 111 |


ஆசிரியர்:—

சாஸ்திர ரத்னம், ப்ரம்மஸ்ரீ தேதியூர்,

**சுப்பிரமணிய சாஸ்திரிகள்,**

மதுரை.

# A. LAKSHMANASWAMY NAIDU,

***Publisher, Rajamundry.***

---

## SARASWATHI TAMIL READRES.

**(UP TO 8TH STANDARD.)**

**BY**

**G. Damodara Mudaliar, B.A.L.T.,**

District Educational Officer &

**Pandit L. Olaganadha Pillai,**

Lecturer in Tamil Sanskrit College Tiruvadi.

## சரஸ்வதிதமிழ் வாசக புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | 0—2—6 | நான்காம் புத்தகம் | 0—5—0 |
| இரண்டாம் புத்தகம் | 0—3—0 | ஐந்தாம் புத்தகம் | 0—6—0 |
| மூன்றாம் புத்தகம் | C—4—0 | | |

6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

## சரஸ்வதி சாஸ்திர வாசகங்கள்.

| | |
|---|---|
| மூன்றாம்புத்தகம் ... | 0—3—0 |
| நான்காம் புத்தகம் ... | 0—4—0 |

5, 6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

## பாலகீதாஞ்சலி

| | |
|---|---|
| பால கீதாஞ்சலி முதல் புத்தகம் ... | 0—2—0 |
| ,, இரண்டாம் புத்தகம் ... | 0—2—6 |
| ,, மூன்றாம் புத்தகம் ... | 0—3—0 |

4, 5-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

| | |
|---|---|
| பாரத கதைகள் (71 பக்கங்கள்) | 0—6—0 |
| பாரத வீரர்கள் (99 பக்கங்கள்) | 0—8—0 |

## ENGLISH BOOKS.

| | Rs. A. P. |
|---|---|
| Sarsawathi English Reader First Book | 0—3—0 |
| Elementary Education for Indian boys and girls (Calico bound.) | 2—0—0 |

by Dr. V. Varahanarasimham M A., Ph. D.

N.B. இப்புத்தகங்கள் எல்லா புத்தக க்கடைகளிலும் கிடைக்கும்.

**A. இலட்சுமணசுவாமி நாயுடு,**

பப்ளிஷர், ராஜமண்டிரி

# சிவோத்கர்ஷம்.

## சென்றமீ தொடர்ச்சி.

சமஸ்தமான வேதாந்த நூல்களிலேயும் துரீயவஸ்துத்தான் உத்க்ருஷ்டமான தேவதை என்று சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் பரமசிவனே துரீயவஸ்துவானபடியாலும் பரமசிவன் தான் உத்க்ருஷ்டமான தேவதை என்று சித்தமாகிறது. பரமசிவனுடைய சக்தியானது நாலு விதமாகப் பிரிக்கப்பட்டு உலகத்தில் விளங்கி வருகிறதென்று சாஸ்திரங்களால் தெரியவருகிறது. அந்த நான்கு விதமான பிரிவுகளிலும் ஒன்று புருஷ ரூபமாகவும் மற்ற மூன்றும் ஸ்திரீ ரூபமாகவும் விளங்கி வருகின்றன. ஸ்திரீ ரூபமாக விளங்கிவருகிற மூன்று சக்திகளோ, பவானி என்றும் துர்க்கை என்றும் காளி என்றும் சொல்லப்படும். யுத்த காலத்தில் துர்க்கையாகவும், கோப காலத்தில் காளியாகவும், போக காலத்தில் பவானியாகவும் அந்த சக்தியானது பிரிக்கப்படுகின்றன. புருஷ ரூபமாகப் பிரிந்த சக்திதான் விஷ்ணுவென்று சொல்லப்படும். பரமேச்வரனுடைய பௌருஷத்தன்மையானது புருஷ ரூபமாக அந்த சக்தி பரிணமித்து விஷ்ணு என்ற பெயரையுமடைந்து லோக பூஜ்யமான தன்மையோடு விளங்கிவருகிறது. இதனுல் விஷ்ணுவைத் துரீயமான தேவதை என்று சொல்கிற சாஸ்திரங்களுக்குப் பரமசிவனே துரீயமான தேவதை என்று நிர்ணயிக்கிற சித்தாந்தத்துடன் விரோத லேசமே ஏற்றப்படாதென்பது திண்ணம்.

விஷ்ணுவை பரமசிவனுடைய சக்தியாகத்தானே ஒப்புக் கொள்ளவேண்டியதாக யிருக்கிறது. சக்திக்கும் சக்திமானன புருஷ

னுக்கும் அபேதந்தான் லோகாநுபவ சித்தமாக ஏற்படுகிறது. அக்னியினிடத்தில் பிரகாசிக்கிற சக்தியும் தபிக்கச் செய்கிற சக்தியும் இருந்துவருகிறது. ஆகிலும் அந்த சக்தியை அக்னியை விட்டு வேருகப் பிரித்துப்பார்க்க முடியுமா? அக்னியினுடைய ஸ்வரூபமாகத்தான் அந்த சக்தியை ஒப்புக்கொள்ளவேண்டும். அதுபோல விஷ்ணு பரமேச்வரனுடைய சக்தியானதால் அந்த விஷ்ணுதத்வமானது சிவதத்வத்துக்கு வேராக ஆகாது. சிவதத்வத்தில் விஷ்ணு தத்வம் அடங்கிவிட்டது. இதனுல் விஷ்ணுவைத் துரீய தேவதை என்று சொல்கிற சாஸ்திரமும் பரமசிவனைத்தான் துரீய தேவதை என்று சொன்னதாக ஆகும். சக்தியை நிமித்தமாக வைத்துச் செய்யும் பூஜைகள் சக்திமானுன புருஷனிடத்தில் தானே பொருந்தும். சக்திமானுன புருஷனைவிட்டுத் தனியாக சக்திக்கு ஸ்துதியோ நிந்தனையோ ஏற்படுவதாக லோகத்தில் காணப்படவில்லை. ஆகையால் விஷ்ணு தத்வமானது சிவதத்வத்தில் அந்தர்பூதமாக ஆனதினுல் பரமசிவனே துரீயமான தேவதை என்றது சித்தமாகிறது. தவிரவும், விஷ்ணுவானவர் மோஹினி வேஷத்தை அணிந்துக்கொண்டிருக்கும் காலத்தில் பரமசிவன் அவரோடு புணர்ந்ததால் சாஸ்தா என்ற ஒரு தேவதையும் பிள்ளையாகப் பிறந்தது என்ற கதையையும் கேட்டிருக்கலாம். தற்காலத்திலும் அந்த சாஸ்தா என்ற தேவதை லோக பூஜ்யமாகவும் கலியுகவரதராகவும் விளங்கிவருகிறுர் என்பது லோகத்தில் பிரசித்தமாயுள்ளது.

இதனுல் விஷ்ணு உண்மையில் பரமசிவனுடைய சக்தி என்பது வெளியாகிறது. விஷ்ணு உண்மையில் புருஷனுகவேயிருந்து வேஷத்தால் ஸ்திரீயாகயிருந்தால் பரமேசுவரன் அவரிடம் புணர்ந்தார் என்பது எப்படி ஏற்படும்? புருஷன் ஸ்திரீவேஷம் போட்டுக் கொண்டிருக்கிறுர் என்ற ஞானம்கூட அந்தப் பரமேச்வரனுக்

கில்லையா? சர்வக்ஞனை பரமசிவனை அவ்விதம் நினைப்பது ரொம்பவும் தவறுதலாக ஆகும். அப்படியே பரமேச்வரன் தெரியாமல் புணர்ந்தாலும் அந்த ரூபம் தான் உண்மையில் ஸ்திரீ ரூபமல்லவே. புருஷ ரூபம் தானே புத்திரோற்பத்தி எப்படி எற்பட்டது? இரண்டு புருஷர்களுடைய சேர்க்கையால் புத்திரோற்பத்தி உண்டா? இவ்விதம் விசாரித்து ஆராய்ந்து பார்த்தால் விஷ்ணுவைப் பரமேச்வரனுடைய சக்தி என்று ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு ஒரு தனி தெய்வமாக ஒப்புக்கொள்கிற சித்தாந்தம் நிலைக்கவே நிலைக்காது. தவிரவும் மஹேசுவரன் என்ற பெயரால் பரமேச்வரனைத் தான் அழைப்பதாக நாம் காண்கிறோம். அந்தப் பதத்தை பரமேச்வரனைத் தவிர வேறு தேவதாபரமாக ஒருவராலும் நயனம் செய்யமுடியாது. ரொம்பவும் கஷ்டப்பட்டு யோக விருத்தியினால் வேறு தேவதாபரமாக நயனம் பண்ணுகிறவர்களும் இந்தப் பதத்தைத் தனது வம்சத்தில் பிறந்த குழந்தைகளுக்குத் திருநாமமாக வைக்கச் சம்மதிப்பார்களா? அதனாலே அவர்களுடைய உள் எண்ணம் வெளியாகிறது என்னவென்றால் மஹேச்வரன் பரமேசுவரன் என்ற பதங்கள் சிவனைத்தான் சொல்லும். நாமோ சைவனில்லை. நம்ப மதமோ சைவசித்தாந்தத்துக்கு விரோதமான கொள்கையுள்ளது. அப்படியிருக்க சிவனைச் சொல்கிற பதங்களை நமது குழந்தைகளுக்குப் பெயராக வைக்கக்கூடாது என்றதைத் தவிர வேறு விதமான எண்ணமேயில்லை. எதோ தனது சித்தாந்தத்தை நிலைநாட்ட மஹேசுவரன் பரமேச்வரன் என்ற பதங்களைத் தன் மதத்தில் சித்தமான தேவதாபரமாகவும் கஷ்டப்பட்டு யோக விர்த்தியால் நயனம் செய்கிறார்கள். அது சரியே; அதனால் அந்த சப்தம் அந்த தேவதையைச் சொல்வதாக ஆகாது. சிவனைத்தான் சொல்லும். மஹேசுவரன் என்ற பதத்திற்கோ ஈசுவராளுக்கும் ஈசுவரன். அதாவது பெரியவன்

என்பது சித்தமாகிறது. பிர்ம்மா, விஷ்ணு, ருத்ரான் என்ற திரு மூர்த்திகளும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களாக ஆகிறபடி யால் ஈசுவரன் என்ற பதத்தால் சொல்லப்படுகிறார்கள். அப்படி ஈசுவரராளான திருமூர்த்திகளுக்கும் இந்தத் துரீயமான பரமேச் வரன் நியந்தாவானதால் மஹேச்வரன் என்ற திருநாமத்தோடு விளங்கிவருகிறான். இந்தப் பெயராலேயே மஹேச்வரன் தான் துரீயமான பிர்ம்மம் என்பது சித்தமாகிறது.

தவிரவும் பிரகிருதி என்ற சப்தத்தால் சொல்லப்படுகிற மாயை யானது கண்ணாடியைப்போல் ஒரு நிர்மலமான பதார்த்தமாகச் சொல்லப்படுகிறது. அந்த மாயையின் சகாயத்தால் தான் இந்தத் துரீய பிர்ம்மம் என்ற பரமேச்வரனும் ஜகத்காரணத்வம் சர்வசக்தி மத்வம் சர்வக்ஞத்வம் என்பதான விசேஷங்களோடு கூடினவனாகி விசேஷ பிர்ம்மம் என்றும் சொல்லப்படுகிறான். அந்த மாயா சம்பந் தம் இல்லாதபோனால் இந்தப் பரமசிவனும் நிஷ்களஞானவடிவாகத் தான் நிலைப்பான். அந்தத் தன்மையில்த்தான் சகல வேதாந்தங்களும் அதை முறையிடுகிறது. இவ்விதம் அந்தப் பரமசிவன் மாயையில் பிரதி பலிக்கும்பொழுது அந்த மாயைக்கு சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்று மூன்று குணமேற்பட்டிருக்கிறபடியால் மூன்று விதமாக அந்த மாயை பிரிக்கப்படுகிறது. ரஜோகுணமும், தமோ குணமும் அடங்கி சத்வகுணம் மேலிடுகிற காலத்தில் சத்வபிர தானமான மாயை என்றும், ரஜோகுணம் மேலிட்டு சத்வகுணமும், தமோகுணமும் அடங்கி யிருக்கும்பொழுது ரஜப்பிரதானமான மாயை என்றும், ரஜோகுணமும், சத்வகுணமும் அடங்கித் தமோ குணம் மேலிட்டிருக்கும் காலத்தில் தமப்பிரதானமான மாயை என்றும் பிரிக்கப்படுகிறது.

இந்த மூன்றிலும் பரமசிவனுடைய சாயைஏற்படும் காலத்தில் தமப்பிரதானமான மாயையில் ஏற்பட்ட சாயையை ருத்ரன் என்றும், சத்வப்பிரதானமான மாயையில் ஏற்பட்ட சாயையை விஷ்ணுவென்றும், ரஜப்பிரதானமான மாயையில் ஏற்பட்ட சாயையை பிர்ம்மாவென்றும் சாஸ்திரங்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதம் திருமூர்த்திகளும் பரமசிவனுடைய பிரதிபிம்பமானதால் பிம்பமாகிய பரமசிவனே திருமூர்த்திகளுக்கு மேலான தெய்வமென்றும், துரீய தேவதை பரமசிவன் தான் என்றும் சொல்வதில் என்ன ஆக்ஷேபனை? பரமேச்வரன் தான் மேலான தெய்வமாக ஆகும்.

அந்தப் பரமேச்வரன் தான் பசுபதி என்ற சப்தத்தாலும் சைவ சித்தாந்தப் பிரகாரம் சொல்லப்படுவான், பசு, பதி, பாசம் என்ற மூன்று தத்வங்கள் சைவசித்தாந்தத்தில் ரகஸ்யமான ஒரு பாகமாகும். பசு என்றால் ஜீவகோடிகளே; அதிலும் அவிவேகிகளான ஜீவகோடிகள் ரொம்பவும் பசு என்ற சப்தத்திற்குப் பொருத்தமாக ஆவார்கள். இஷ்ட வஸ்துவில் பிரவிருத்தியும் அநிஷ்ட வஸ்துக்களிலிருந்து நிவர்த்தியும் பசுக்களிடமும் காணப்படுகின்றன. அதுதான் பசுக்களின் ஸ்வபாவ தர்மமாகும். ரொம்பவும் செழிப்புள்ள புல் பூண்டுகளைப் பார்த்த மாத்திரத்தில் பசுக்கள் அதில் பிரவிர்த்திக்கவில்லையா? கழியுடனும் கத்தியுடனும் வருகிற மனிதர்களைப் பார்த்த மாத்திரத்தில் பசுக்கள் பயந்து ஓடவில்லையா. ஆகையால் பசுக்களுக்கும் பிரவிர்த்தி நிவர்த்தி என்பது இயற்கையிலேயே உள்ளன.

அந்தப் பசுக்களைப்போல் அவிவேகிகளான ஜனங்களும், தனக்கு இஷ்டமான கார்யத்தில் பிரவிர்த்திக்கிறதும், தனக்கு இஷ்டமில்லாததான கார்யத்திலிருந்து பின் வாங்குகிறதாகவும்,

மாத்திரம் முயற்சி உள்ளவர்களாக இருந்து வருகிறார்கள். அன்னியில் தான் எங்கிருந்து வந்தோம், எவ்விடம் போய்ச் சேரப்போகிறோம், இந்த மானிடஜன்மாவானது எவ்வித மஹிமை தங்கியது, இந்த ஜன்மாவில் நாம் தேடி சம்பாதித்துக் கொள்ளவேண்டிய புருஷார்த்தம் எவை, என்ற விவேகம் கொஞ்சமேனும் இல்லாதவர்களாயும் இருக்கிறார்கள். அவ்விதமான அவிவேகியான ஜனங்களை பசுக்களென்றே சொல்லவேண்டும்.

அத்துடன், தனது பார்வைக்கு புலப்படும் பொருள்களை மாத்திரம் நம்பி, சாஸ்திரத்தில் சொல்லியதை நம்பாமல் இருக்கிறவர்களும், பசுக்களாக ஆவார்கள். லோகத்தில் பசு என்று சொல்லப்படுகிற பிராணிக்கு சாஸ்திரம் தெரியுமென்றோ, சாஸ்திரத்தில் நம்பிக்கை உண்டு என்றோ சொல்லமுடியுமா? தன் கண்ணுக்குப் புலப்பட்ட வஸ்துவை மாத்திரம் தானே, அந்தப் பசு என்ற பிராணி நம்பி, தனது வாழ்நாளைப் போக்கடிக்கிறது. அதுபோல எந்தப் பிராணிகள் சாஸ்திரத்தையும், பரலோகத்தையும், ஈச்வரனையும், ஜன்மாந்தரங்களையும், நம்பாமல், கண்ணுக்குப் புலப்படுவதை மாத்திரம் நம்பி, தேஹமே, ஆத்மா என்ற நிச்சயத்துடன், தேஹபோஷணையையும், சிற்றின்பத்தையும், சாப்பாடு, தூக்கம், வம்பு, இதுகளை மாத்திரம் அனுஷ்டித்து வருகிற மனுஷ்யர்கள் *ஆகாரத்தால் மனுஷ்ய வடிவாகத் தோன்றினாலும், நடத்தையில் பசுக்கள் தான் என்றதில் யாதொரு விதமான ஆக்ஷேபணையும் இராது.

இவ்விதமான, பசுக்களுக்குச் சமானமான ஜீவகோடிகளை பாசங்கள் என்கிற கயிறுகளால் பரமசிவன் கட்டி பரிபாலிக்கிறவனாதால் அந்தப் பரமசிவனுக்கு பசுபதி என்ற திருநாமமும் விளங்கி வருகிறது. (தொடரும்.)

* உருவத்தால்.

# ஜாதி பேதம்.

(சென்றமீ தொடர்ச்சி.)

ஒரு நகரத்தில், மின்சார விளக்குகளால் அலங்காரம் செய்திருக்கிறது. அந்த மின்சார விளக்குகள் ஆயிரக்கணக்காக இருந்தாலும், அவைகளுக்குள்ளகரண்டு(current)ஒன்றுதான். ஆகிலும், ஒருஇடத்தில் உள்ள பிரகாசம் போல்,மற்றோரிடத்தில்இல்லை.கரண்டு ஒன்றுதானே. ஏன் பிரகாசத்தில் வேற்றுமை ஏற்படுகிறது என்பதை ஆலோசித்தால், அதற்குக் காரணம் கரண்டை வேறுபடுத்த முடியாமற்போனாலும் பல்புகளை (Bulb) வேறு படுத்தித்தானே ஆக வேண்டும். பல்புகள் ஒரு ஜாதியிலேயே உள்ளதா? எத்தனையோ விதமான கலர்கள் உள்ளதாயும், எத்தனையோ விதமான உருவத்தோடு கூடியதாயும், வெவ்வேறான பவர்களை உடையதாயும், காணப்படுகின்றனவல்லவா? அந்த பல்புகளுடைய வேற்றுமையை யாரால் தடுக்கக்கூடும்? அதுபோல் இந்த உலகமாகிற பெரிய நகரில் இந்தப் பிராணிகளை மின்சார விளக்குகளாகவே பாவிக்கவேண்டும். அதுகளுக்கு, இந்தஆத்மஸ்வரூபமே கரண்டாகும்.ஆத்மஸ்வரூபம்ஒன்று என்பதில் யாருக்கும் எக்காலத்திலும் யாதொரு விதமான ஆட்சேபணையும் கிடையாது. அந்த ஆத்மஸ்வரூபம் என்ற கரண்டுக்குப் பிராணிகளுடைய சரீரங்களை மின்சார விளக்கு ஸ்தம்பங்களாகவும், பிராணிகளுடைய அந்தக்கரணங்கள் என்கிற மனதுகளை மின்சார விளக்கு பல்புகளாகவும் பாவித்துக்கொள்ள வேண்டும். மனதாகிற பல்புகள் வெவ்வேறு ஜாதிகள் உள்ளது. சில மனதுகள் ஸத்வ குணங்களோடு கூடியனதாக இருக்கலாம். சில மனதுகள் ரஜோ குணங்களோடு கூடியனதாக இருக்கலாம். சில மனதுகள் தமோ

குணங்களோடு கூடியனதாக இருக்கலாம். வெளுப்பே ஸத்வகுண மாகும். சிவப்பே ரஜோகுணமாகும். கருப்பே தமோகுணமாகும். அந்தந்த சரீரத்தில், மனதாகிற பல்புக்குத் தகுந்தபடி, ஆத்ம சைதன்யம் என்ற கரண்டுக்கும் பிரகாசம் வெவ்வேருகக் காணப் படுகின்றன. ஒருவன் வித்வானுக இருக்கிருன். மற்ருெருவன் அவித்வானுக இருக்கிருன். ஒருவன் ராஜா, மற்ருெருவன் சேவகன்; ஒருவன் பாபி; ஒருவன் புண்ணியவான், என்று பலவிதமான வேற்றுமைகள் காணப்படுகின்றன. பல்புகளை மறந்து, கரண்டை மாத்திரம் கவனித்தால் தான், ஒன்று என்ற சித்தாந்தம் நிலைக்குமே தவிர பல்புகளிலேயே திருஷ்டியுள்ள மனிதர்களுக்கு ஒன்று என்ற சித்தாந்தம் எப்படி எற்படும்? ஜாதி வேற்றுமை இயற்கையிலேயே எற்பட்டது தான் என்று அவர்களும் ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும்.

தவிரவும், ஜாதிகள் ஒன்று தான் என்று சொல்லுகிறவர்கள், சரீரத்தால் ஜாதியை ஒன்று என்று சொல்லுகிருர்களா? ஆத்மாவி னுல் ஒன்று என்று சொல்லுகிருர்களா? ஆத்மாவினுல் ஒன்று என்பது எல்லா வாதிகளுக்கும் சம்மதமே. சரீரத்தால் ஒன்று என்ற பக்ஷத்தில் சரீரம் ஒரே விதமாகக் காணப்படுகிறபடியால் ஒன்று என்று சொல்லுகிருர்களா? சாஸ்திர ப்ரமாணத்தால் சொல்லுகிருர்களா? சாஸ்திர ப்ரமாணத்தால் என்ருல், ஜாதி ஒன்று என்று சொல்லுகிற சாஸ்திரம், ஒன்றுமே கிடையாது. ஜாதி ஒன்று என்று சொன்னுல், அந்த சாஸ்திரத்திற்கு ப்ராமாண்யமே சித்திக் காது. பல ஜாதியாக இருந்தால் அல்லவா, இன்னன்ன ஜாதிக்கு இன்னன்ன தர்மம் இகத்திற்கும் பரத்திற்கும் க்ஷேம சாதனம் என்று சொல்லி, சாஸ்திரம் ப்ராமாண்யத்தை அடையும். ஜாதி ஒன்ருனுல் வெவ்வேறு தர்மத்தைச் சொல்லுகிற சாஸ்திரம் எப்படி நிலைக்

கும்? சரீரத்தில் வித்யாசமில்லாததினால் ஜாதி ஒன்றென்று சொல்லு கிற பக்ஷமும் சரியல்ல. ஒரு மனிதனுடைய சரீரத்திலேயே இடது கை வலது கை என்று இருக்கின்றன. அந்த இரண்டு கைகளுக்கும் * ஆகாரத்தில் ஏதாவது வித்யாசம் தோன்றுகிறதா. அந்த இரண்டு கைகளையும் ஒரே ஜாதியாக வைத்துக்கொண்டு, வலது கையினால் செய்யக்கூடிய காரியத்தில் இடதுகைக்குப்பிரவிருத்தியையும், இடது கையினால் செய்யக்கூடிய சௌசம் முதலான காரியங்களில் வலது கைக்குப்பிரவிருத்தியையும், ஜாதி ஒன்று தான் என்று சொல்லுகிற வர்கள் அநுஷ்டிக்க ஆரம்பிப்பார்களேயானால், அதன் பிறகு ஜாதி வேற்றுமையை அவர்கள் விஷயத்தில் ஒழித்து ஜாதி ஒன்று என் பதை அவர்களும் அநுஷ்டிக்கும்படி வற்புறுத்துவதற்கு, ஜாதி வேறு என்று சொல்லுகிறவர்களும் கடமைப்பட்டவர்களே.

தவிரவும், நமது வீட்டில் சமயல் செய்வதற்காக மூட்டும் நெருப்புக்கும், ச்மசானத்தில் சவத்தை எரிக்கும் நெருப்புக்கும், உருவத்தில் வேற்றுமை தெரிகிறதா? வேற்றுமை தெரியாததினால், அந்த இரண்டையும் ஒரே ஜாதி தான் என்று ஒப்புக்கொண்டு, அந்தச் சவத்தை எரிக்கும் நெருப்பில், காப்பி டிகாஷன் போட்டோ அல்லது சமையல் செய்தோ சாப்பிடத் துணிவார்களா? அந்த ஜாதியை ஒன்று என்று சொல்லுகிறவர்கள் அப்படிச் செய்தால், அவர்களுடைய விஷயத்தில் ஜாதி வேற்றுமை ஏது? ஒன்று தான் என்பதில் ஆட்சேபணையே இல்லை.

தவிர, பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்ற நாலு ஜாதிகள் இல்லை. எல்லாம் ஒன்று தான் என்று சொல்லுகிறவர்கள், ஒரு தரித்திரக் குடும்பத்தையும், ஒரு பணக்

* உருவம்

காரக் குடும்பத்தையும் ஒன்று என்று தானே சொல்லவேண்டும். தன் பிள்ளைகளுக்கு தான் சம்பாதித்ததைக் கொடுப்பதைப்போல், அயல் வீட்டுப் பிள்ளைக்கு தான் சம்பாதித்ததை ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்? இரண்டும் ஒன்று தானே. அங்குமாத்திரம் வேற்றுமையா? அதோடு போக்தாவான புருஷனுடைய ஜாதியை ஒன்றாக அடிக்கிறவர்கள் போஜ்யமான பதார்த்தத்தினுடைய ஜாதியையும் ஒன்றாகத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால், திவ்வியமான அன்னம், அமேத்யம், பால், மூத்ரம், முதலானவைகள் ஒரே ஜாதி தானே. அவைகளை ஓரே ஜாதியாக நினைத்து, சமானமாக அனுஷ்டித்து வந்தாலல்லவா ஜாதி மதம் கிடையாது என்று சொல்லுகிறவர்கள் புத்திமான்களாக ஆவார்கள். அவர்களிஷ்டப்படி, சிலவற்றில் ஜாதி வேற்றுமை உண்டு, சிலவற்றில் இல்லை என்று சொன்னால் அவர்களுடைய வார்த்தையை யார் நம்புவார்கள்? ஜாதி ஒன்று என்றால் எல்லா விஷயத்திலும் அதை உபயோகப்படுத்தி அனுஷ்டிக்க வேண்டாமா? ஆகையால், ஜாதி ஒன்று தான் என்று சொல்வது வீண் பிரலாபமாக ஆகுமே தவிர, யுக்திக்கோ, சாஸ்திரத்துக்கோ, ஒத்ததாக ஆகாது என்பது திண்ணம். (தொடரும்)

# விச்வாமித்ர யாகம்.

விச்வாமித்ர மஹரிஷியானவர் ஸித்தாச்ரமத்தில் தான் யாகம் பண்ணுவதற்கு ஆரம்பித்து ஸுபாகு, மாரீசன் முதலான ராக்ஷசர்களால் அந்த யாகத்திற்குத் தடையேற்பட்டு யாகம் நின்றுவிட்டது. இவ்விதம் ஒரு தடவை மாத்திரம் மஹரிஷியால் யாகம் ஆரம்பிக்கப் பட்டு, ராக்ஷசர்களால் தடை ஏற்பட்டுப் பூர்த்தியாகாமல் இருந்தது என்பது இல்லை. பல தடவைகளில் இவ்விதமே நடந்து வந்தது. மஹரிஷியான விச்வாமித்திரும் ரொம்பவும் மனக்கவலை யால் பீடிக்கப்பட்டு, நாம் ஸங்கல்பம் செய்த யாகமானது எப்பொழுது தான் பூர்த்தி அடையும்; ஸுபாகு, மாரீசன் முதலான ராக்ஷசர்களை ஜெயிக்கும் பலம் உள்ள வல்லவன் நமக்கு ஸகாயமாக எப்பொழுது இந்த பூலோகத்தில் ஏற்படப் போகிறான்? என்று கவலை உள்ளவராக இருந்து வரும் காலத்தில், 'அயோத்யா நகரத்திற்கு அதிபதியான தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாக லக்ஷ்மீபதியான மஹாவிஷ்ணு அவதரித்திருக்கிறார். ஸ்ரீராமன் என்ற பெயரால் உலகம் முழுவதும் ப்ரஸித்தியடைந்து, சௌர்யம், வீர்யம், பராக்ரமம், புத்திசக்தி, முதலான கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவராகவும், விளங்கி வருகிறார். அந்த ஸ்ரீராமனை நாம் அழைத்து வந்தால் நாம் ஸங்கல்பம் செய்த யாகத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம், அவன் ஒருவன் தான் ஸுபாகு, மாரீசன் முதலான ராக்ஷசர்களை ஜெயிக்கும் வல்லமையுள்ளவன், என்று தீர்மானித்து, அப்படியே அந்த மஹரிஷியும் அயோத்யா நகரம் சென்று ஸ்ரீராம பிரானையும் யாக ஸம்ரக்ஷணத்திற்காக தசரத சக்ரவர்த்தியிடம் யாசித்து வசிஷ்டமஹரிஷியினுடைய உதவியால், லக்ஷ்மணனோடு கூடின ராமனை, தசரத சக்ரவர்த்தி தன்னிடம்

அர்ப்பணம் செய்தபடி, தானும் அந்த ராமனை லெக்ஷ்மணனோடு கூட அங்கீகரித்துக்கொண்டு, ஸித்தாச்ரமத்திற்கும் அழைத்துக் கொண்டு வந்து, ராமலெக்ஷ்மணனுடைய உதவியால், தான் யாக ஸங்கல்பத்தையும் செய்து, நடுவில் முன்போல் யாகத்தைக் கெடுக்க வந்த ஸுபாகு, மாரீசன் முதலான ராக்ஷஸர்களையும், ராமன் மூலமாக ஜெயித்துவிட்டு, தன்னுடைய யாகத்தையும் பூர்த்தி செய்துகொண்டு, அவப்ருதஸ்னானமும் செய்துவிட்டு தன் ஜென்ம ஸாபல்யத்தையும் அடைந்து, விச்வாமித்திர மஹரிஷியானவர் க்ருதார்த்தனாக ஆனார், என்ற கதையானது ஸ்ரீமத் இராமாயணத்தில் ப்ரஸித்தமாக விளங்கி வருகிறது.

ஸித்தாச்ரமத்தில் விச்வாமித்திர மஹரிஷி யிருக்கும்பொழுது, அவருடைய மனைவி, அந்த ஆச்ரமத்தில் இருந்தாளா? இல்லையா? அப்படி மனைவியுடன் அந்த மஹரிஷி யிருந்ததாக யிருந்தால் அவருடைய விஷயமாக யாதொரு ப்ரஸ்தாபமும் ராமாயணத்தில் வாராததின் காரணமென்ன? ராகவன் லெக்ஷ்மணனோடு கூட மஹரிஷியினுடைய ஆச்ரமத்திற்கு வந்த காலத்தில், விச்வாமித்திருடைய மனைவியும் அங்கிருந்தாளானால், ராமலெக்ஷ்மணனுக்கு ஸத்க்ரியை செய்ததாகச் சொல்ல வேண்டாமா? அவ்விதமான கதை ஒன்றையும் காணோமே. அதின் காரணமென்ன? அல்லது, விச்வாமித்திர மஹரிஷிக்கு மனைவி அந்த சமயத்தில் ஆச்ரமத்தில் இல்லையா? அப்படியானால் யாகம் பண்ணுவதில் அவருக்கு அதிகாரம் எப்படி ஸித்திக்கும்? தர்மபத்னியோடு கூடின புருஷன் தானே யாகம் செய்யலாம். அத்துடன், விச்வாமித்திர மஹரிஷியைப் பற்றி மஹா தபஸ்வி என்றும், சாஸ்திரங்களிலும், உலகங்களிலும், பெரிய ப்ரஸித்தி ஏற்பட்டு இருக்கிறதே. காயத்ரீதேவி என்ற பரதேவதையை அவரல்லவா ப்ரத்யக்ஷமாக தரிசனம்செய்து,

அந்த மந்திரத்தின் ப்ராபவத்தைப் ப்ரத்யக்ஷமாக அநுபவித்தவர்; அப்படி யிருக்கும் மஹரிஷிக்கு, தான் செய்யும் யாகத்தை விக்னம் பண்ணும் ராக்ஷஸர்களை தானே சபித்து, சாம்பலாகச் செய்ய சக்தி யில்லையா? எதற்காக ராமனை அழைத்து வந்தார்? இந்த விஷயங்களை நிர்ணயம் செய்து உலகத்தில் ப்ரசாரம் செய்ய வேண்டியது அவச்ய மானது என்பதை நினைத்து, இதில் அந்த விஷயம் எழுதப்படு கிறது. அந்த விச்வாமித்ர மஹரிஷியின் யாக ஸம்பந்தமான உண் மைகளை இதன் மூலம் விசாலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

விச்வாமித்ர மஹரிஷியைப்போல் ஸகல ப்ராணிகளுக்கும் நன் மையைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் உள்ள மஹரிஷி இன் னொருவர் இருக்கிறார் என்று சொல்ல முடியாது. உலகத்திற்கே இன்னொருவன் இவரைப்போல் * பந்து இல்லை யென்றே, உலகத் திற்கு இவர் அந்தரங்கமான பந்து என்றே, இவரைத்தான் சொல்ல வேண்டும். அவர் செய்த யாகமோ ஸகல ப்ராணிகளுக்கும் இகத்தி லும், பரத்திலும் ஸகல விதமான ச்ரேயஸ்ஸுகளைக் கொடுக்கும் பயனுள்ளதான புண்ணியகர்மாவே தவிர அவருக்குப் பயனை கொடுக்கும்கர்மாவல்ல. தனது க்ஷேமத்தைக்கருதி ஒருவன் தர்மத் தைச் செய்தால் அவன் அதமமான தார்மிகனாக ஆகிறான். தனது க்ஷேமம், லோகத்தின் க்ஷேமம், இரண்டையும் கருதி தர்மத்தைச் செய்கிறவன் மத்யமமான தார்மிகனாக ஆகிறான். தன்னுடைய க்ஷேமத்தைக் கருதாமலே உலகத்தின் க்ஷேமத்தை மாத்திரம் கருதி, தர்மத்தைச் செய்கிறவன், உத்தம தார்மிகனாக ஆகிறான். இந்த விச்வாமித்ர மஹரிஷி செய்த புண்ணிய கர்மாவானது உலகத் தின் க்ஷேமத்திற்கு மாத்திரம் ஆகிறபடியால், அவரை உத்தம தார்மிகன் என்று சொல்லவேண்டும்.

* ஸ்நேகிதன்

ஸித்தாச்ரமத்தில் அவர் காயத்ரீ மந்திரத்தை புரஸ்சரணே செய்ததாக, ஸ்காந்தம், மார்க்கண்டேய புராணம் முதலானவைகளில் சொல்லப்பட்டு இருக்கின்றன. 'புரஸ்சரணே' என்பதற்கு, காயத்ரீ மந்திரஸித்தி என்பது பொருளாகும். அந்த மந்திரஸித்தியில், ஜெபம், ஹோமம், தர்ப்பணம், ப்ராம்மண போஜனம் என்ற நான்கு விதமான அங்கங்களுண்டு. அந்த நான்கு அங்கங்களுள், 'ஹோமம்' என்றது ரொம்ப முக்யமான அங்கமாகும். ஜெபமும் அவ்விதமே. தர்ப்பணமும், ப்ராம்மண போஜனமும் கௌணமான அங்கந்தான். அந்த ஹோமம் என்ற முக்யமான அங்கத்தை ஆறு தினங்களிற் செய்யவேண்டுமாக, சாஸ்திரங்களிற் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்த காயத்ரீ ஹோமம் என்ற புண்ணிய கர்மாவுக்கு 'மஹாயாகம்' என்றும், 'தேவியாகம்', என்றும், 'ஏகஸாத்தி' என்றும், அநேக விதமான காரணப் பெயர்களும் உண்டு. இந்த யாகத்தில், தர்மபத்னியின் அபேக்ஷை வேண்டாம். காயத்ரீ மந்திரத்தில் அதிகாரமுள்ள ப்ராணிகளுக்கு இந்த யாகத்திலும் அதிகாரம் உண்டு. அதனுல் விச்வாமித்ர மஹரிஷிக்கு அந்த யாகத்தை அநுஷ்டிக்கும் காலத்தில் தர்மபத்னி யிருந்தாளா, இல்லையா என்ற சந்தேகத்திற்கு அவகாசமேயில்லை. அப்பொழுது விச்வாமித்ருருடைய மனைவியும் அங்கு இல்லை. அவர் தனியாகத் தான் மந்திர ஸித்தி செய்து வந்தார். இதற்கு முன்பாக அவர் அங்காங்கு நானு திக்குகளிலும், இந்த காயத்ரீ மந்திரத்தை ஸித்தி செய்து, கடூரமான தபஸைச் செய்து வந்தார் என்பதற்கு அவர் ப்ராம்மணத் தன்மையை அடைந்ததே பயன் ஆகும். ஸித்தாச்ரமத்தில் செய்த மந்திர ஸித்திக்கு லோகத்தினுடைய க்ஷேமமே பயனுகும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் விச்வாமித்ர மஹரிஷி மந்திர ஸித்தியால் ப்ராம்மணனாக ஆனது போல் தற்காலத்தில் ப்ராம்மண ரல்லாதவர்கள், விச்வாமித்ர மஹரிஷி எந்த மந்திரத்தை ஸித்தி செய்தாரோ, அந்த மந்திரத்தை நாமும் ஸித்தி செய்து, ப்ராம்மணத் தன்மையை ஏன் அடையக்கூடாது? என்று சில பண்டிதமானி களான ப்ராம்மணரல்லாதவர்கள், முன் வருவார்களேயானால் அவர் களுக்கு பதில் அளிக்கப்படுகிறது.

அதாவது விச்வாமித்ரர் தாய் மூலமாகவும், தந்தை மூலமாக வும், எல்லா ப்ரகாரத்திலும், ப்ராம்மணரல்லாதவராக இருந்து, மந்திர ஸித்தியினால் மாத்திரம், ப்ராம்மணத் தன்மையை அடைந்தார் என்று நினைப்பது தப்பாகும். விச்வாமித்ருடைய தாய் வழி க்ஷத்திரிய வழியானாலும், தந்தை வழி உத்தம ப்ராம்மண வழி யாகும். ச்ருஷ்டிகர்த்தாவான ப்ரம்மாவினுடைய மனதினால் ச்ருஷ் டிக்கப்பட்ட ப்ரம்மரிஷிகளுடைய பரம்பரையில், 'காதி' என்ற மஹரிஷி ச்ரேஷ்டருக்கு விச்வாமித்ரர் புத்திரனாக ஜெனித்தார். மேல் வர்ணத்திலுள்ளவன் கீழ் வர்ணத்திலுள்ள ஸ்திரீயை விவாகம் செய்து கொள்வது சாஸ்திர ஸம்மதமானதினால் 'காதி' என்ற மஹரிஷியும், க்ஷத்திரிய ஸ்திரீயை விவாகம் செய்து கொண்டார். அந்த ஸ்திரீயிடம் விச்வாமித்ரர் ஜெனித்தார். தாய் வழியாக வந்த ராஜ்யத்தையும் கொஞ்ச நாள் ஆண்டார். பிறகு தந்தை வழியாக வந்த ப்ராம்மணத் தன்மையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டு மென்ற ஸத்வாஸனை மேலிட்டது. அந்த ஸத்வாஸனை ஏற்பட்ட தற்கு, வஸிஷ்டருக்கும் விச்வாமித்ருக்கும் ஏற்பட்ட கலகமே காரணமாகும். அந்த ஸத்வாஸனையை அனுசரித்து காயத்ரீ மந்திர ஸித்தியாலும், தபஸ் சக்தியாலும், தந்தை மூலம் தனக்கு ஸித்தித்த ப்ராம்மணத் தன்மையைப் பூர்த்தி செய்து கொண்டார். இது

தான் அதின் உண்மை. அன்னியில் இவர் ப்ராம்மணரல்லாதவருக இருந்து, தபஸால் ப்ராம்மணர் ஆனர் என்பது இல்லை. முன்பு ப்ராம்மணன் அல்லாதவனை, ஒரு கர்மாவினுல் ப்ராம்மணனுக செய்ய முடியுமானுல், குதிரை யில்லாததான, கழுதையையும் கர்மாவினுல் குதிரையாகச் செய்து விடலாமே. அது ஸாத்யமாகுமா? ஸாத்ய மில்லை. ஆனல் தாய் எவ்வித ஜாதியுள்ளவளாய் இருந்தாலும் தந்தை ப்ராம்மணனுனல் அந்தத் தாயினிடத்தில் பிறக்கும் பிள்ளைக்குத் தந்தை மூலம் ப்ராம்மணத் தன்மை ஸித்திக்கிறபடியால் அதை மந்திர ஸித்தியால் பூர்த்தி செய்து கொள்ளலாம். என்று இக்கதையினுல் ஸித்திக்கிறதே, அது சாஸ்திர ஸம்மதந் தானு? என்று கேட்டால் அதற்கும் பதில் அறியவும்.

ப்ராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன் என்ற மூன்று வர்ணங் களுள், மேல் வர்ணத்தில் பிறந்தவன், கீழ் வர்ணத்தில் பிறந்த பெண்ணை விவாக விதியை அனுசரித்து சாஸ்திர ப்ரகாரம் போக நிமித்தமாகக் கல்யாணம் செய்துகொண்டு, அந்த ஸ்திரீயினிடம் ப்ராம்மணனுக்குப் பிறக்கும் பிள்ளையினிடம் தான் இந்த விச்வா மித்ரர் கதையில் சொன்ன நியாயத்தை அன்வயித்துக்கொள்ள வேண்டுமே தவிர சூத்திர ஸ்திரீயினிடத்தில் ப்ராம்மணனுக்குப் பிறக்கும் பிள்ளையினிடம் இதை அன்வயித்துக்கொள்ள முடியாது. சூத்திர ஸ்திரீயினிடம் சம்பர்க்கம் செய்கிற ப்ராம்மணனுக்கே ப்ராம்மணத்தன்மை போய் விடுகிறது என்றிருக்கும்பொழுது அந்த சூத்ர ஸ்திரீயினிடம் ப்ராம்மணனுக்குப் பிறந்த பிள்ளைக்குத் தந்தை மூலம் ப்ராம்மணத்தன்மை ஏற்படுகிறது என்பது எப்படி ஸித்திக் கும்? ஆகையால் விச்வாமித்ருடைய கதையில் சொல்லும் நியா யத்தை, ப்ராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன் என்ற மூன்று வர்ணங்களுக்குள்ளே தான் உபயோகப்படுத்தலாம்.

(தொடரும்.)



ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதாள்,

# ஸ்ரீ சங்கர விஜயம்.

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பாக இந்தபாரத தேசத்தில் கர்மயோகம் என்ற சுவர்க்கத்தை அடைவதற்குள்ள உபாயமோ, ஞானயோகமென்ற மோக்ஷத்தை அடைவதற்குள்ள உபாயமோ, இந்த இரண்டு மார்க்கமும் இருக்குமிடம் தெரியாமலே அழிந்து போய் விட்டதற்குச் சமானமாகவே ஆய்விட்டது. அதற்குக் காரணமோ வேதத்தை நம்பாதவர்களான பல நாஸ்திகர்களுடைய மதம் ஓங்கி வளர்ந்து வந்ததே தான் ஆகும். சாங்க்ய மதம், பௌத்த மதம், பாசுபத மதம், காபாலிக மதம், திகம்பர மதம், வைநாசிக மதம் முதலான பல நாஸ்திக மதங்கள் நமது வைதீக மதத்தை அடியோடு அழிக்க உத்ஸாஹமுள்ளதாக உலகத்தில் பரவி வந்தது. அச்சமயம், பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வர்ணங்களுள், ஒரு மனிதனுவது தனது ஸ்வதர்மத்தில் நம்பிக்கை உள்ளவனாக இருந்து வந்தான் என்பதே இல்லாமல் ஆய்விட்டது. பரலோகத்தையோ, வேதத்தையோ, ஈச்வரனையோ, நம்பாமல் ஸ்தூலதேஹமே, ஆத்மா என்ற எண்ணம் தடித்து, அவரவர்கள், மனம்போல், போக ரஸிகர்களாகவே நடந்து கொண்டு வந்தார்கள். அப்படி பூலோகமானது தபித்து வரும் பொழுது, யாகமோ, ஜபமோ, தபஸோ, வ்ரதங்களோ, அத்யயன மோ, ஹோமமோ, இவைகள் ஒழுங்காக நடந்து வரக் காரண மில்லாமற் போய்விட்டது. அப்படியானல், தேவலோகத்தில் தேவர் களுக்கு எப்படி ஸௌக்யம் ஏற்படும்? பூலோகத்தில் நடக்கும், யாகம் முதலான கர்மா மூலமாகத்தான் தேவலோகத்தில் ஸுபிக்ஷம் ஏற்படுகிறதென்று நமது ஹிந்து மதத்தினுடைய ஸித்தாந்தமாகும்.

அவ்விதம் கர்மாக்கள் நடைபெறுததினல் தேவலோகத்திலும், தார்மிஷ்டரானது அதிகரித்துவிட்டது. அவ்வித மிருக்கும்பொழுது, அந்த காலத்தில், பிராணிகளை ஸன்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கச் செய்து எல்லா லோகங்களுக்கும் நன்மையைச் செய்ய முயற்சி செய்த மஹரிஷிகளுடைய ப்ரயத்தனமும் பயனற்றதாக ஆய்க் கொண்டிருந்தது. அந்த மஹரிஷிகளும் நாம் இதில் ப்ரயத்தனம் செய்வதில் ப்ரயோஜனமில்லை என்று, நினைத்து, தம், தம் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்வதற்காக அந்தந்த மஹரிஷிகளும் ஔதாஸீன்யத் தன்மையை அடைந்து விட்டார்கள்.

அந்த சமயத்தில் தர்மலோபத்தால் உலகம் தபித்து வருவதை யாராலும் இவ்வளவு தான் என்று சொல்லவும் முடியாது, எழுதவும் முடியாது. அப்படி யிருக்கும்பொழுது ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய சகல தேவர்களும் ஒன்று கூடி, அதற்குப் பரிகாரத்தை அவரவர்கள் ஆலோசித்தும் அவரவர்களுடைய புத்திக்கு அது எட்டாமல், மஹா கைலாசம் சென்று, திவ்ய ஸிம்மாசனத்தில், பார்வதியோடு, அமர்ந்துகொண்டும், ஆறுமுகக் கடவுளாகிய தமது குழந்தையை, மடியில் வைத்துக்கொண்டு பரம ஸந்தோஷத்துடன் பாவனை செய்துகொண்டும் இருக்கிற, பரமேச்வரனைப் பார்த்து சாஷ்டாங்க நமஸ்காரங்களைச் செய்து அநேக விதமான ஸ்தோத்திரங்களாலும் அந்த பரமேச்வரனைத் துதித்து, சகல தேவர்களும் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு மேற்சொன்ன உலகத்தின் பரிதாப நிலைமையை தெரிவித்தார்கள். பரமேச்வரனும் கருணையினல் நிறைந்த தனது கடாக்ஷத்தால் தேவர்களைப் பார்த்து "ஹே தேவர்களே! இவ்விதம் உலகத்தின் பரிதாப நிலைமையை நீங்கள் தெரியப்படுத்துவதற்கு முன்பாகவே நான் அறிந்துகொண்டிருக்கிறேன். நாரத மஹா முனியும், அடிக்கடி என்னிடம் இந்த

விஷயத்தைத் தெரியப்படுத்தியிருக்கிறார். நீங்கள் பயப்படவேண்டாம். கூடிய சீக்கிரத்தில், நானே புண்ய பூமியில் ப்ராம்மண குலத்தில் அவதரித்து, துர்மதங்களைக் கண்டித்து, ஸன்மதத்தை ஸ்தாபனம் செய்கிறேன். உலகத்தில் தர்ம ஸ்தாபனம் செய்ய ஒரு பண்டிதன் முன் வந்தால் ப்ரஜைகள் அதற்கு உட்பட்டு நடந்து கொள்வதற்குப் பண்டிதனுடைய சாமர்த்தியம் மாத்திரம் போதாது. அரசனுடைய சஹாயமும் வேண்டும். அதனால் தேவேந்திரனவன் பூலோகத்தில் சகல ராஜதானிக்கும் திலகமாக விளங்கி வரும், மாஹிஷ்பதி என்ற ராஜதானியில் க்ஷத்திரிய குலத்தில் அவதரித்து, எனக்கு சஹாயமும் செய்யவேண்டும். நீங்கள் சொல்லும் உலகத்தின் பரிதாப நிலைமையை நிவருத்திசெய்ய அஸ்த்ர சஸ்த்ரங்களால் முடியாது. வாதமாகிய போர் செய்து தான் நாஸ்திகர்களை ஜயிக்க வேண்டும். வாதமாகிற போர் ஒழுங்காக நடப்பதற்கு ராஜ சஹாயமே அவசியமானது. ஆகையால் 'சுதன்வா' என்ற பெயருடன் இந்திரன் பூலோகத்தில் அவதரித்து அரசாளவேண்டும். அப்படியே ப்ரம்மாவும் பூலோகத்தில் விப்ரகுலத்தில் அவதரித்து எனக்கு சஹாயம் செய்யவேண்டும். அதுபோல் விஷ்ணுவும், வாயுவும் அவதரிக்க வேண்டும். மற்ற தேவர்களும் அங்காங்கு என்னுடைய ஸஹாயத்திற்காக அவதரிக்க வேண்டும்." என்று தேவர்களுக்குப் பரமேச்வரன் ஆஞ்ஞாபனம் செய்துவிட்டுத் தனது மடியில் அமர்ந்திருக்கும் சுப்ரமண்ய மூர்த்தியாகிய ஆறுமுகக் கடவுளைப் புன்சிரிப்புடன் தனது கருணை கடாக்ஷத்தினால் பார்த்தார்.

அப்படி பார்த்த பரமேச்வரனுடைய அபிப்பிராயமோ என்னவென்றால் அதை அறியவும். அதாவது "குழந்தாய் கர்மகாண்டந் தான் ரொம்பவும் முக்யமானது. கர்மகாண்டத்தை ஸ்தாபனம்

செய்து விட்டால் ஞான காண்டமானது ஸ்தாபிக்கப்பட்டதாகவே ஆய்விடும். பூலோகத்தில் அங்காங்கு கர்மலோபம் ஏற்பட்டு விட்டது. கர்மா இல்லாதபோனல் பிராணிகளுக்கு மனது எப்படித் தான் சுத்தமாகும். ஆரோக்யமோ, ஐச்வர்யமோ, ஆயுளோ, புத்ர மித்ர சம்பத்தியோ, தேஹ காந்தியோ இவைகள் எப்படி சம்பவிக்கும் ? அதனல் கர்மகாண்டத்தை முதன்மையாக ஸ்தாபிக்க வேண்டியது நமது கடமை. புத்த மதத்தினுடைய பெருக்கைப் பூலோகத்தில் அளந்து முடியாது. அந்த புத்த மதத்திற்கு ஆசார்யனும், சர்வஞ்ஞன் என்ற விருதோடு கூடினவனும் உள்ள 'சுகதர்' என்பவருடைய வேதபாஹ்ய சித்தாந்தத்தை அடியோடு கண்டித்து வைதிகமான கர்மயோகத்தைப் பூலோகத்தில் ஸ்தாபனம் செய்ய நீ ஒருவன் தான் சக்தியுள்ளவன் ஆகையால் நீயும், பூலோகத்தில் பிரும்ம குலத்தில் திரு அவதாரம் செய்து வைதீகமான மார்க்கத்தை ஸ்தாபனம் செய்து, நாஸ்திகர்களேயும் கண்டித்து ஸமஸ்தமான லோகங்களுக்கும் க்ஷேமத்தை உண்டுபண்ண வேண்டும்." என்ற அபிப்ராயத்துடன் தான் பரமேச்வரன் ஆறு முகக் கடவுளைக் கடாக்ஷத்தால் பார்த்தார். ஆறுமுகக் கடவுளும் சர்வஞ்ஞனை தன் தந்தையின் அபிப்ராயத்திற் கிணங்கி பூலோகத்தில் பிரும்ம குலத்தில் தான் திரு அவதாரம் செய்ய உத்ஸாஹமுள்ளவராக ஸங்கல்பம் செய்து விட்டார்.

இவ்விதம் மஹா கைலாசத்தில் பரமேச்வரன் தீர்மானம் செய்து தேவர்களை அவரவர்களின் ஸ்தானம் போகும்படி ஆஞ்ஞாபித்தார். தேவர்களும் பரம ஸந்தோஷத்துடன் ப்ரதக்ஷிண நமஸ்காரங்களால் பரமேச்வரனைச் சந்தோஷிக்கச் செய்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு, தம், தம் ஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு, தேவேந்திரனும், பரமேச்வரனுடைய ஆஞ்ஞையை அனுசரித்துப் பூலோகத்தில் 'மாஹிஷ்பதி' என்ற ராஜதானியில் (அதாவது கார்த்தவீர்யார்ஜுனனுடைய வம்சத்தில்)ராஜகுமாரனாக அவதரித்து க்ரமமாக வம்ச பரம்பரையை அனுசரித்து ஏற்பட்ட ராஜ்யலக்ஷிமியையும் தான் மகுடாபிஷேகத்தையும் செய்துகொண்டு, நீதியோடு பிரஜைகளைப் பரிபாலனம் செய்துகொண்டு வந்தான். அந்த வம்சத்தில் பிறந்த ராஜாக்களுக்குத் தனுர்வித்தையில் சாமர்த்தியம் அதிகமானதினாலும், இந்த ராஜகுமாரனுடைய தனுஸ் ரொம்பவும் உத்க்ருஷ்டமானதினாலும், இந்த ராஜகுமாரன் பட்டத்திற்கு வந்த பிற்பாடு, 'சுதன்வா' என்ற திருநாமத்தோடு விளங்கி வந்தான் இந்த ராஜகுமாரன் தான் முந்தி ஸ்வர்க்க லோகத்தை ஆண்ட இந்திரனாக இருந்து பரமேச்வரனுடைய ஆஞ்ஞையினால் வைதீக மார்க்கத்தை ஸ்தாபனம் பண்ண, பூலோகத்தில் அவதரித்தவனாக இருந்தாலும், ஸங்கம் (சேர்க்கை) சரியாக இல்லாததில் நாஸ்திக மதத்தையே அனுசரித்தவனாக ஆய்விட்டான். இவன் அரசாளும் காலத்தில் புத்த மதம் ரொம்பவும் ஓங்கி வளர்ந்து 'சுகதர்' என்ற புத்தாசார்யரும் சர்வஞ்ஞன் என்ற விருதோடு லோகத்தில்பிரஸித்தியை யடைந்து ஸகலப் பிராணிகளாலேயும், தெய்வம் என்ற நிலைமையில் பூஜிக்கத் தகுந்தவராக இருந்து வந்தார். அதுபோல் வைதீக மார்க்கத்தில் பிரபலாளான பண்டிதர்கள் இல்லாமலே ஆய்விட்டது. அதனால் சுதன்வா அரசாளும் காலத்தில் புத்த மதக் கொள்கையே ராஜாங்கத்தில் அதிகரித்து, ராஜாவும் புத்தாசாரத்தையே அனுஷ்டிப்பதில் உத்ஸாஹ முள்ளவனாகவே இருந்து வந்தான். வைதீக மத ஸ்தாபனம் பண்ண வந்த அரசன் இவ்விதம் மாறுதலை அடைந்ததும், பிராணிகளுடைய தௌர்ப்பாக்கியத்தால் தான் என்றே சொல்லவேண்டும். இவ்விதம், இந்தக் கதை இருக்கும்பொழுது, ஆறுமுகக் கடவுளுடைய அவதாரமும் பூலோகத்தில் ஏற்பட்டது.

அதாவது, கோதாவரி தீரத்தில் விளங்கிவரும் 'ராஜமஹேந்திரி' என்ற நகரத்தில், 'விச்வநாதஸோமயாஜி' என்ற ஒரு பிராமணோத்தமன் 'தர்மாம்பாள்' என்ற தன் தர்மபத்னியோடு கூட அநேக விதமான வேதோக்த கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு பரம ச்ரோத்திரியனாகவும், பரம வித்வானாகவும் விளங்கி வந்தார். அந்த

ப்ராம்மணன் ஒருவன் மாத்திரம் தர்மலோபம் ஏற்பட்ட அந்தக் காலத்திலும் தப்பிப் பிழைத்து ச்ரோத்திரியனாக இருந்து வந்தான். பலவாறாகத் தோஷம் உள்ள மனிதனிடத்திலும் ஒரு குணமிருக்கும் என்ற நியாயத்தை அனுசரித்துப் பலவாறாக அதர்மத்தால் பீடிக்கப்பட்ட பூலோகத்திலும், அந்தக் காலத்தில் மேற்சொன்ன இந்த பிராம்மணன் இருந்து வந்தான். அந்த விச்வநாதஸோமயாஜி என்ற பிராம்மணனே ஸகல விதமான ஸம்பத்தால் நிறைந்தவராக இருந்து வந்தாலும் புத்ர ஸந்தானம் அவருக்கு இல்லாததினால் அதன் நிமித்தமாக ஒவ்வொரு தினமும், அபாரமான துக்க சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டு வந்தார். இப்படி யிருக்கும்பொழுது, ஒரு நாள் ராத்திரியில் அவர் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது ஸ்வப்பனத்தில் பரமேச்வரன் சன்யாஸ வேஷதாரியாக வந்து 'மஹா கைலாச வ்ரதம்" என்ற வ்ரதத்தை நீ அனுஷ்டித்துக் கோடி லிங்கங்களை ப்ரதிஷ்டை செய்து பூஜை பண்ணினால் உனக்கு திவ்ய புத்ர லாபம் ஏற்படுமென்று" சொல்லிவிட்டு மறைந்து விட்டார். உடன், அந்த விச்வநாதஸோமயாஜி என்ற ப்ராம்மணனும், விழித்துக்கொண்டார். பிறகு, அந்த ஸ்வப்னவ்ருத்தாந்தத்தைத் தன் தர்மபத்னியான தர்மாம்பாளிடம் சொல்லி, அவர்கள் இருவர்களும் மஹா கைலாச விருதத்தை அனுஷ்டித்து அதற்கு அங்கமாகக் கோடி லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்து பூஜை செய்தார்கள். அந்தப் புண்யப்ராபவத்தால், ஆறுமுகக் கடவுள் பரமேச்வரனுடைய ஆஞ்ஞையை அனுசரித்து, அந்த தம்பதிகளுக்குத் திருக்குமாரனாக அவதரித்தார். விச்வநாதஸோமயாஜி என்ற பிராம்மணனும் தனக்கேற்பட்ட புத்ர வைபவத்தைப் பார்த்துப் பரமானந்தத்தை அடைந்து, 'குமாரிலபட்டன்' என்ற திருநாமத்தை வைத்து அந்தக் குழந்தையை அழைத்தார். அந்தக் குழந்தையும் ஏழாவது வயதில் பிதா மூலமாக உபநயனம் செய்துகொண்டு 14-வயது முடிகிறதற்குள், நான்கு வேதங்கள், 6-சாஸ்திரங்கள், மற்ற சகல கலைகளிலும் நிகரற்ற மஹா வித்வானாக ஆய்விட்டார். ஆகிலும் பௌத்த மதத்தை நிராகரிக்க அந்த மத சம்பிரதாயத்தையும் நாம் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்து, புத்தாசாரியரான சுகதரிடத்திலும் சிஷ்யபாவத்தை அடைந்து புத்த சாஸ்திரத்தைப் படிக்க சுகதரிடம் போய்ச் சேர்ந்தார்.

(தொடரும்.)

# ஸம்சார லீலை.

இந்த உலகத்தில் சகலமான ராஜதானிக்கும் மேலானதாயும் அநேக விதமான புண்யப் பிராபவங்களால் சித்தித்ததாயும் உள்ள ஒரு ராஜதானியானது இருந்து வருகின்றது. அதற்கு மாயாபுரி என்கிற பெயர் ஏற்பட்டது. அது எல்லோருக்கும் தெரிந்த ராஜ தானியே. ஆனால் அந்த ராஜதானிக்குப் புருஷன் அரசனல்ல. ஒரு ஸ்திரீ தான் அரசாண்டு வருகிறாள். அந்த மஹாராணிக்கு வித்யாவிநாசினி என்று ஒரு பிரஸித்தமான பெயருண்டு. ஆனால் அவளுடைய நடத்தை மிகவும் கெட்டதானது. அதை யுத்தேசித்து எந்தப் புருஷனும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவ்விதம் அந்த மஹாராணிக்குக் கல்யாணம் செய்துகொண்ட சொந்தப் புருஷன் யாருமில்லாத போதிலும் பெண்களும் பிள்ளை களும் அளவற்றவைகளாக இருந்து வருகின்றன. இதனாலேயே அவளுடைய நடத்தையை நல்லது கெட்டது என்று யாரும் தெரிந்து கொள்ளலாம். அப்படி அவள் ஏராளமான பிள்ளைகளையும் பெண்களையும் பெற்றவளாக இருந்தாலும் இப்பொழுது தான் அவள் ப்ரௌடையானவள் போல் நல்ல யுவதியாக இருந்து வருகிறாள். அவளுடைய சௌந்தர்யத்தையும் சாமர்த்யத்தையும் யாராலும் வர்ணிக்க முடியாது.

அவளுக்குத் தாய் தகப்பன் ஊர் இவைகளை யாரும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அனலன் என்ற பெயர் உள்ள ஒரு மூர்க்கன் அவளுடைய ராஜதானியில் பிரதான மந்திரியாக இருந்து வருகிறான். அவன் ரொம்பவும் பராக்கிரமத்தோடு கூடியவன் அவனை யாராலும் ஜெயிக்க முடியாது. அந்த மஹாராணிக்கு

உண்டாயிருக்கும் பெண் பிள்ளைகளுள் இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் உலகத்தையே விழுங்கி விடுவார்கள். அதாவது அந்த மூன்று பேர்களும் அவ்வளவு பராக்கிரமசாலிகள் இரண்டு பெண்களுள் ஒருத்திக்கு மானினி என்றும் மற்றொருத்திக்குப் பாசினி என்றும் பெயர் பிரஸித்தமாக விளங்கி வருகிறது. இந்த உலகத்திலுள்ள எல்லா அர்சர்களும் ஒன்று சேர்ந்து போர் செய்ய வந்தாலும் இந்த இரண்டு பெண்களை அவர்களால் ஜெயிக்க முடியாது. கோரன் என்ற பெயருடன் கூடிய ஒரு பிள்ளை முன் சொன்ன பையனுவான். அவனும் ரொம்ப பலசாலி, இவ்விதமான ஸகல சம்பத்தும் நிறைந்த அந்த வித்யாவினாசினி என்ற மஹாராணியை சகல அண்டத்தையும் ஆளும்படியான சக்தியுள்ள சார்வபௌமனுன ஒரு ராஜன் பார்க்கும்படி ஒரு சமயத்தில் நேர்ந்தது.

அந்த அரசனும் ஆனந்தவர்மா என்ற பெயரால் உலக முழுவதும் பிரஸித்தி யடைந்தவன், அந்த அரசன் இந்த ராணியைப் பார்த்த மாத்திரத்தில் இவளிடம் மோஹம் கொண்டவனுக ஆய் விட்டான். இவளை அவன் பார்க்கும்பொழுது புதிதாக ப்ரௌடையானவள் போலவும் யுவதியாகவும் மிகவும் அழகு நிறைந்தவளாயும் அந்த அரசனுக்குத் தோன்றினபடியால் இவளிடம் அவனுக்கு அளவற்ற மோஹம் ஏற்பட்டுவிட்டது. உடன் அந்த அரசனும் அந்த ராணி காலில் விழுந்து என்னை உன் புருஷனுக அங்கீகரித்துக் கொள்ளவேண்டும். உன்னுடைய அதீனமாகவே நான் இருந்து வருகிறேன். உன்னுடைய கிங்கரன் என்று என்னை பாவிக்கலாம். என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அந்த ராணி பதில் சொன்னதாவது அரசனே நீ அகண்டமான தேசத்தை ஆண்டு வருகிற ஒரு சார்வபௌமன்; உனது பெரு

மையை அளவிட முடியாது; நான் ஒரு சின்ன மாயாபுரி என்ற ராஜதானிக்கு ராணியாக இருந்து வருகிறேன். எனக்கும் உனக்கும் எப்படி சமத்வம் எற்படும்? என் இஷ்டப்படி நடக்கக்கூடிய புருஷனைத்தான் நாயகனாக அங்கீகரிப்பேன், அந்த நாயகனிடமும் எனக்கு இச்சை இருக்கும் பொழுது தான் நான் புணருவேன். அவனுடைய இஷ்டப்படி நான் நடந்துகொள்ள மாட்டேன். என்னைக் கல்யாணம் செய்துகொள்வதில் இவ்வளவு நிர்ப்பந்தம் இருக்கும்பொழுது உன்னுடைய பெருமையை நீ மறந்துவிட்டு என்னை நீ இச்சிக்கலாமா? உனக்கு அது அழகல்ல; உன்னிடமுள்ள பெருமையும் மஹிமையும் உனக்குத் தெரிந்தால் என்னை நீ ஆசைப் படமாட்டாய்? தவிரவும் உன்னுடைய பெருமையை நீ தெரிந்து கொண்டிருக்கும் சமயத்தில் உன்னை நான் விட்டுவிடுவேன். அதற்கு உனக்கு சம்மதமா. அப்படியானால் நான் உன்னை நாயகனாக அங்கீ கரிக்கிறேன். என்நகரத்தில் தான் நீ இருக்கவேண்டும் உன் நகரத் துக்கு நான் வர முடியாது. என்னிடம் சேர்ந்துவிட்ட விஷயத்தில் உன் பந்துக்கள் யாராவது தெரிந்துகொண்டு அவர்கள் உன்னிடம் வந்து உன்னுடைய பெருமையை சொல்லி என்னைவிட்டு கலைக்க எத்தனித்தார்களானால் அவர்களுடைய வாக்கை நீ கேள்க்காம லிருப்பாயா? அவர்களிருக்கிற இடம் நீ போகாமலிருப்பாயா? அவர்களை உன் பந்துவாக நீ நினைக்காமலிருப்பாயா? இவ்விதமான நிபந்தனைகளுக்குட்பட்டு நீ பிரமாணம் செய்துகொடுத்தால் உன்னை நாயகனாக இப்பொழுதே அங்கீகரித்துக் கொள்வேன் என்று உத்தண்டமாகப் பேசினாள்.

அதைக்கேட்ட ஆனந்தவர்மா என்ற அரசனும் என் கண்மணி யே உன்னை என் குல தெய்வமாக நினைத்து உனக்கு எதிரில் நான் பிரமாணம் செய்கிறேன் என் ராஜ்யத்தை நான் இது முதல் நினைக்

கிறதில்லை மறந்து விடுகிறேன். என்னுடைய பெருமையும் கௌரவத்தையும் உன் சங்க நிமித்தமாக நினைக்கிறதேயில்லை; எனக்கு உன் சங்கமே பெரிது. என் பெருமையை யாராவது என் பந்துக்கள் கூற வந்தாலும் அவர்களை நான் லக்ஷியமும் பண்ணுகிறதில்லை; அவர்களுடைய வார்த்தையை நான் கேட்கிறதுமில்லை; எத்தனை ஜன்மாக்கள் நான் எடுத்தாலும் உன் சங்கத்தை விடாமல் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று பிரதிக்ஞை செய்தான்.

அந்த ராணியும் பரம சந்தோஷத்தோடு இந்த ஆனந்தவர்மாவைத் தனது நாயகனாக அங்கீகரித்துக்கொண்டு மாயாபுரி என்ற ராஜ்யத்தில் பத்மவிலாஸம் என்ற தன்னுடைய அந்தப் புரத்தில் ரொம்பவும் ஸுகமாக அநேக காலம் கிரீடித்து வந்தாள். இந்த ஆனந்தவர்மா என்ற அரசனும் அவளுடைய சங்கத்தால் ஏற்படக் கூடிய சுகம் மோக்ஷத்தில் கூட இல்லை என்று நினைத்தான். அவளிடத்திலேயே உயிரையும் அர்ப்பணம் செய்து அவளுக்குக் கிங்கரனாகவும் ஆகி ஸ்நானம் போஜனம் சயனம் முதலிய லௌகீக கார்யங்களிலும் சந்தியாவந்தனம் முதலான வைதீக கார்யங்களிலும் சிரத்தை யில்லாதவனாய் மூடனாகவும் ஆய்விட்டான்.

இப்படி யிருக்கும்பொழுது புத்திமதி என்ற பெண்ணும் அவளிடத்தில் அந்த ராஜனுக்கு உண்டானது. அந்தப் புத்திமதி என்ற பெண்ணிடத்தில் உண்டான அபிமான வசத்தால் அந்தப்பெண்ணுக்கும் அடிமையாகவே இருந்து வந்தான். அந்தப் புத்திமதி என்ற பெண்ணை முன் சொன்ன அனலன் என்ற மந்திரியே கல்யாணம் செய்துகொண்டான். இந்த ஆனந்தவர்மாவுக்கு அனலன் மருமகனாக ஆய்விட்டபடியால் புத்திமதி என்ற தன் பெண்ணுக்கு அடிமையாயிருந்து வருகிற தான் தன் மருமகனுக்கும் அடிமையாக ஆய்விட்டான். அந்த அனலன் என்ற தன் மருமகன் சொன்னபடி

புண்யமின்னது பாபமின்னது என்று விசாரிக்காமலே சொன்ன காரியங்களெல்லாவற்றையும் தான் தாசனாக இருந்து செய்து வந்தான். இவ்விதம் இந்த சார்வபௌமனான அரசன் தன் ஸ்வதாரப்ரியத்தையு மிழந்து இந்த ராணிக்கும் அடிமையாய் அவள் பெண் புத்திமதிக்கும் அடிமையாய் அனலன் என்ற மந்திரிக்கும் அடிமையாயிருந்து கொண்டு பாரதந்திரிய சாம்ராஜ்ய ராஜ்யத்தில் அபிஷேகம் பண்ணிக்கொண்டிருக்கிறான்.

அப்பொழுது இவனுக்கு சுகலேசமாவது ஏற்பட நியாயமுண்டா? இப்படி யிருக்கும்பொழுது ஆனந்தவர்மா என்ற அரசன் மூடத்தனத்தால் தான் பெரிய சுகியாயிருப்பது போல் நினைக்கிறான். இது ரொம்பவும் ஆச்சரியப்படத்தருந்தது. கடைசியில் தற்காலத்தில் அந்த ராணியினிடத்தில் ஒரு ஆண் குழந்தையும் பிறந்திருக்கிறது. அந்தக் குழந்தைக்கு உஜ்ஜீவகன் என்று பெயர். அந்தக் குழந்தையைக் காப்பாற்றுகிற விஷயத்தில் இந்த அரசன் படுகிற கஷ்டம் சொல்ல முடியாது. இப்படி யிருக்கும்பொழுது அடிக்கடி கால்யவனன் என்ற மிலேச்சராஜனால் யுத்தம் செய்து இவன் ஜெயிக்கப்பட்டு அவனுக்கு அடிமையாக ஆகி, அவனுடைய நகரத்தில் சிறையில் அநேக நாள் அடைபட்டு துக்கத்தையும் அனுபவித்து விடுதலையான பிறகு மறுபடியும் மாயாபுரிக்கு வந்து வித்யாவிநாசினியோடு கட்டிப்புரண்டு அவளுக்கும் அவள் பெண்ணுக்குமாக அடிமையாயிருந்து கொண்டு அனலன் என்ற மந்திரி சொன்னபடி காலயவனன் என்ற மிலேச்சராஜாவினுடைய நீதிக்கு விரோதமான காரியத்தையும் செய்து அவனால் ஜெயிக்கப்பட்டு சிறையில் செல்லுகிறான்.

இவ்விதம் இந்த ஆனந்தவர்மா என்ற அரசன் சார்வபௌம பதவியையும் தனது அளவற்ற மஹிமையையும் மறந்துவிட்டுக்

காலயவனனுடைய சிறையிலும் வித்யாவிநாசினியினுடைய நகரத்திலும் அங்குமிங்குமாகத் திரும்பித்திரும்பி சஞ்சாரம் செய்துகொண்டு அளவற்ற கஷ்டத்தையும் அனுபவித்து வருகிருன். இந்தத் தருணத்தில் இந்த ஆனந்தவர்மாவினுடைய பூர்வ புண்யத்தால் லோகமான்யன் என்ற இவனுடைய பந்துவானவன் ஒரு மஹானுபாவன் இவருடைய கஷ்டத்தை யறிந்து ஐயோ கஷ்டம் இந்த ஆனந்தவர்மா தனது நிகரற்ற பசவியையுமிழந்து பெருமையையு மறந்து இந்த வித்யாவிநாசினி என்ற ஒரு ஸ்திரீக்காக மாயாபுரியில் இவ்விதம் பாரதந்திரியத்தை அனுபவித்து வருகிருனே இந்தத் துக்கத்தை ஸகிக்க முடியுமா? நாம் பந்துவாய் இருப்பதினுல் அவனுடைய சமீபம் சென்று அவனுடைய மஹிமையை எடுத்துரைப்போம்; அதைக் கேட்டறிந்தாவது வித்யாவிநாசினியை விட்டு தொலைக்கமாட்டானு? என்ற எண்ணங்கொண்டு மாயாபுரிக்குச்சென்ருன்.

## குறிப்பு.

| | | |
|---|---|---|
| மாயாபுரி | — | சரீரம் |
| வித்யாவிநாசினி | — | அவித்யை |
| ஆனந்தவர்மா | — | ஜீவன் |
| அனலன் | — | காமன் |
| புத்திமதி | — | புத்தி |
| உஜ்ஜீவகன் | — | பிராணன் |
| மாணினி | — | அகந்தை |
| பாசினி | — | மமதை |
| கோரன் | — | துராசாரம் |
| பிள்ளைகள் | — | பாபங்கள் |
| பெண்கள் | — | இந்திரிய விருத்திகள் |
| காலயவனன் | — | யமன் |
| சிறை | — | நரகம் |
| அங்குமிங்கும் | — | ஜன்மமரணம் |
| லோகமான்யன் | — | சற்குரு |

# ஸ்ரீமத் பகவத்கீதை.

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

இவ்விதம் துரோணாசாரியரிடம், துரியோதனன் பீஷ்மரை சிலாகித்துப்பேசின வார்த்தையானது, பீஷ்மருக்கு ஞான திருஷ்டியால் தெரியவந்தது. அதை அறிந்த பீஷ்மரும் தன்னிடத்தில் பொருமான புத்தியுள்ள துரியோதனனுக்கு பாண்டவ சேனையைப் பார்த்த மாத்திரத்தில் ஏற்பட்டிருக்கும் பயகம்பாதிகளை நிவருத்தி செய்வது நமது கடமையாகும் என்று எண்ணி, அந்த துரியோதனனுக்கு சந்தோஷத்தையும், தைர்யத்தையும் உண்டு பண்ணுவதற்காக சிம்ஹநாதத்தையும் தான் செய்து சங்கநாதத்தையும் செய்தார். பீஷ்மர் சங்கநாதம் செய்தவுடன் கௌரவாளுடைய சேனைகளில் இருந்து வரும் பிரபலாளான சேனா நாயக்கர்களும் அவரவர்கள் தம்தம் சங்கத்தை வாசிக்க ஆரம்பித்தார்கள். யுத்த பேரியும் அடிக்கப்பட்டது. பாண்டுகளும், அங்காங்கு யுத்தத்தின் ஆரம்பத்தை சூசிப்பித்துக்கொண்டு வாசிக்கப்பட்டன.

இவ்விதம் கௌரவாளுடைய சேனையில் ஏற்பட்ட யுத்த ஸந்நாக சப்தமானது உலக முழுமையும் வியாபரித்துக்கொண்டு பெரிய நாதமாக ஆய்விட்டது.

இப்படி இருக்கும் பொழுது பாண்டவாளுடைய சேனைக்கு ரக்ஷகனான கிருஷ்ணபரமாத்மாவும், அர்ஜுனனும், வெள்ளைக் குதிரைகளால் அலங்கரிக்கப்பட்ட நவரத்னங்கள் வைத்திழைக்கப்பட்ட திவ்யமான தங்க ரதத்தில் அமர்ந்துகொண்டு திவ்யமான சங்கங்களை இருவரும் வாசித்தார்கள். தேர்ப்பாகனான கிருஷ்ண பரமாத்மாவினால் 'பாஞ்சஜன்யம்' என்று பிரசித்தி பெற்ற சங்க

மானது வாசிக்கப்பட்டது. அப்படியே அர்ஜுனனால் 'தேவதத்தம்' என்ற சங்கமும், பீமசேனனால் 'பௌண்டரம்' என்ற சங்கமும், தர்மபுத்ரரால் 'அனந்தவிஜயம்' என்ற சங்கமும், நகுல, சஹா தேவன் இவர்களால், 'சுகோஷம்', 'மணி புஷ்பகம்' என்ற சங்கங் களும் க்ரமமாக வாசிக்கப்பட்டன. அப்படியே, த்ருஷ்டத்யுமனன், த்ருபத மஹாராஜா, சாத்யகி, முதலான பாண்டவ சேனையிலுள்ள பிரபலாளான வீரர்களும், தம்தம் சங்கங்களை வெவ்வேறாக வாசித் தார்கள். அப்படி பாண்டவ சேனையில் வாசிக்கப்பட்ட சங்கத் வனிகளானது, த்ருதராஷ்டிரனுடைய புத்ரர்களான துரியோதனன் முதலானவர்களுடைய மனதைப் பிளந்துகொண்டு, ஆகாயத்தை யும், பூமியையும், பிரதித்வனி சப்தத்தால் சப்தமுள்ளதாகச்செய்து கொண்டு, லோகத்திற்கு பயத்தை யுண்டுபண்ணக் கூடியதாயும், கோரமாயும் விளங்கி வந்தன.

இவ்விதம், இரண்டு கக்ஷிகளிலுள்ள பிரதானமான வீரர்கள் சங்கத்வனிகளால் ஆரவாரம் செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் அஸ்த்ர, சஸ்த்ரங்களை ப்ரயோகம் செய்ய ஆரம்பிக்க சித்தமாக இருக்கும்பொழுது, அர்ஜுனனானவன், துரியோதனாதிகளுடைய சேனாசன்னாகத்தைப் பார்த்து, தான் பரம உத்ஸாஹத்தோடு தன்னுடைய காண்டீவம் என்ற வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு, கிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்து, ஒரு வார்த்தை சொன்னான். அதாவது "கிருஷ்ணா! இரண்டு சேனைகளுடைய நடுவில் ரதத்தை நிறுத்தவேண்டும். எதிரிகளுடைய சேனையில் எவர்கள் என்னுடன் யுத்தம் செய்ய உத்ஸாஹம் உள்ளவர்களாக வந்து நிற்கிறார்கள் என்றதை நான் பார்க்க இச்சிக்கிறேன்". என்று சொன்னான். பகவானான ஸ்ரீகிருஷ்ணனும், தேர்ப்பாகனாக தான் இருந்துகொண்டு வரும் நிலைமையில் அர்ஜுனனுடைய வார்த்தையைத் தான் கேட்

பது அவசியமானதினால் அவ்விதமே அர்ஜுனனுடைய வார்த்தையைத் தான் அங்கீகரித்துக்கொண்டு, இரண்டு சேனைகளுக்கும் நடுவில் தான் ரதத்தையும் நிறுத்தி, அதிலும் பீஷ்மர், துரோணர் முதலிய பிரமுகர்களுக்கு எதிராக ரதத்தை நிறுத்திவிட்டு, "அர்ஜுனா! துரியோதனனுக்காக தனது பிராணனைக் கூடவிட ஸன்னத்தாளாக இருந்துகொண்டு, அவனுடைய கக்ஷியில் நம்மோடு போர் செய்யத் தயாராக இருக்கும் போர் வீரர்களை கவனித்துப் பார்". என்று சொன்னார். அர்ஜுனனும் அவ்விதமே துரியோதனனுடைய கக்ஷியிலிருக்கும் போர் வீரர்களைப் பார்த்தான். அப்படி அர்ஜுனனால் பார்க்கப்படும் பொழுது அர்ஜுனனுக்கு தந்தை ஸ்தானத்திலுள்ள 'பூரிஸ்ரவஸ்' முதலான பெரியோர்களும், பாட்டனாருடைய ஸ்தானத்திலுள்ள பீஷ்மர், ஸோமதத்தன், முதலான பெரியோர்களும், ஆசார்ய ஸ்தானத்திலுள்ள துரோணர், கிருபர் முதலான பெரியோர்களும், மாமாவினுடைய ஸ்தானத்திலுள்ள சகுனி முதலான பெரியோர்களும், தம்பி, தமையன் ஸ்தானத்திலுள்ள துரியோதனன் முதலானவர்களும், துரியோதனனுடைய பிள்ளையான லக்ஷ்மணன் முதலானவர்களும் லக்ஷ்மணனுடைய பிள்ளைகளும், அசுவத்தாமா முதலான சிநேகிதர்களும், துரியோதனனுடைய மாமனார் முதலானவர்களும் காணப்பட்டார்கள். இவ்விதம், துரியோதனனுடைய கக்ஷியில் தனக்கு எதிரியாக நிற்கிறவர்கள் அதிகமாக தனது பந்துக்களாகவும், குருக்களாகவும் இருக்கிறபடியால் இவ்விதமான பெரியோர்களுடன் போர் செய்து நாம் ராஜ்யத்தை யடைந்தாலும், நாம் நன்றாய் வாழ்வோமா? நம்மால் கொல்ல தகுந்தவர்களா துரியோதனனுடைய கக்ஷியில் நிற்கிறவர்கள், பூஜிக்கத் தகுந்தவர்களான மஹான்களல்லவா எதிரியாக இருந்து வருகிறார்கள்? ஐயோ

பெரும்பாவம். ஏன் இந்தக் காரியத்தில் பிரவ்ருத்தித்தோம்? என்று கருணை மேலிட்டு பரம துக்கத்தை அடைந்தவனுய்க்கொண்டு அர்ஜுனனுனவன் பகவானைப் பார்த்து, சொல்லுகிறுன்.

"கிருஷ்ணு! ஹே ப்ரபோ! யுத்தம் செய்ய இச்சையோடு எதிர்க் கக்ஷியில் நிற்கிறவர்களை நான் பார்த்தேன். அவர்கள் எல்லோர்களும் அநேகமாக எனக்கு பந்துக்களாயும் சுக்ருத்களாயும், குருக்களாயும் இருந்து வருகிறுர்கள். அவர்களைக் கொன்று என் ராஜ்ஜியத்தை யடைய என் மனம் துணிய வில்லை. என் கை கால்களில் நடுக்கம் உண்டாய்விட்டது பார்த்தாயா! முகமும் சுண்டிப்போய் விட்டது. சரீரமும் நடுங்குகிறது. மயிர்க் கூச்சலும் எற்படுகிறது. காண்டீவம் என்ற வில்லும், என் கையிலிருந்து நழுவிக் கீழே விழும்போலிருக்கிறது. சரீரத்தில் ஒரு எறிச்சலும் எற்பட்டிருக்கிறது. இங்கே நிற்பதற்கே னக்கு மனம் வரவில்லை. மனது ஒரே சுழல்காற்றுபோல் சுற்றுகிறது. அத்துடன் சுபசூசகம் ஒன்றையும் காணேம். இதனுல் நமக்கு சிரேயஸ் எற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஸ்வஜனங்களை வதித்து சிரேயஸ்ஸைத் தான் எப்படி யடைய முடியும். ராஜ்ஜியத்திலும் எனக்கு இச்சையில்லை. ஜயத்திலும், சுகத்திலும் எனக்கு இச்சையில்லை. எந்த மஹான்களுடைய பிரயோஜனத்தின் பொருட்டு ராஜ்ஜியத்தையோ போகத்தையோ உயிரையோ நான் இச்சிப்பேனே, அந்த மஹான்கள், உயிரை வெறுத்து எதிர் கக்ஷியில் எனக்கு எதிரியாக நிற்கிறுர்கள். என்னை அவர்கள் கொல்வதற்குத் துணிந்தாலும் நான் அவர்களைக் கொல்வதற்குத் துணியமாட்டேன். இந்தப் பூலோக ராஜ்ஜியம் ஒன்றல்ல மூன்று லோகத்திலும ஸாம்ராஜ்ஜிய பதவி எனக்குக் கிடைக்கிறதானுலும், அப்பவும் ஸ்வஜனங்களைக்கொன்று அது கிடைப்பதானுல் வேண்டாம். துரியோதனுதிகளைக்கொன்று நாம் ஒரு லாபத்தையும் அடையப்போகிறதில்லை. பாபத்தைத் தான் சம்பாதித்துக்கொள்வோம்.

( ஆனால் நீ நினைக்கலாம். இவர்கள் 'ஆததாயி'.(1) அதாவது ஒரு வீட்டை நெருப்பை வைத்துக்கொழுத்துகிறவன்,(2) சோத்தில் விஷத்தை கலந்து கொடுக்கிறவன், (3) எப்பொழுதும் கையில் கத்தியை வைத்துக்கொண்டிருக்கிறவன், (4) அன்யனுடைய பொருளை அபகரித்தவன்,(5) அன்யனுடைய பூமியை அபஹரித்தவன்,(6) அன்னியனுடைய தாரத்தை அபஹரித்தவன் இந்த ஆறு பேர்களும், "ஆததாயி" என்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறார்கள். இந்த ஆறு பாபங்களில் ஒரு பாபமிருந்தாலும் அவனைக் கொல்லவேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கிறது. துரியோதனாதிகளிடமோ, ஆறு விதமான பாபங்களும் இருந்து வருகின்றன. அர்ஜுனா! உன்னை அரக்குமாளிகையில் வைத்துக் கொளுத்தவில்லையா? உனக்கு விஷத்தை அவர்கள் கொடுக்கவில்லையா? கத்தியும் கையுமாக அவர்கள் எப்பொழுதும் இருந்து வருகிறார்களல்லவா. தனம், பூமி இவைகளை அபஹரித்து விட்டார்களென்றதும் பிரத்யக்ஷமே. சதுரங்கத்தில் திரௌபதியையும் அவமதித்து அபஹரிக்கவில்லையா? இவ்விதம் ஆததாயிக்குச் சொன்ன ஒவ்வொரு லக்ஷணங்களும், ஒன்று கூடக் குறையாமல் துரியோதனாதிகளிடத்தில் இருந்து வரும் பொழுது, ஆததாயியைக் கொல்லவேண்டுமென்ற சாஸ்திரத்தை அனுசரித்து அவர்களைக் கொல்வதல்லவா நியாயமாகும். அப்படி யிருக்கும்பொழுது அவர்களைக் கொன்றால் யாதொரு லாபமும் இல்லை, பாபம் தான் சித்திக்கும் என்று சொல்லுகிறாயே என்று ஹே, கிருஷ்ணா, நீ கேழ்க்கக்கூடும்.)

ஆகிலும் நான் இவர்களைக் கொல்ல துணியமாட்டேன். ஆததாயியைக் கொல்லவேண்டுமென்ற சாஸ்திரம் ஸ்வஜனம் இல்லாத தானப் பிராணியைக் குறித்து ஏற்பட்டது. ஸ்வஜனமாயிருந்தால் ஆததாயியா யிருந்தாலும் கொல்லக்கூடாது தான். துரியோதனன்

முதலானவர்கள் ஸ்வஜனம் என்றதில் என்ன ஆக்ஷேபணை? அவர்கள் ஆததாயியா யிருந்தாலும் நான் கொல்ல மாட்டேன். ஸ்வஜனத்தைக் கொன்று எப்படி க்ஷேமத்தை அடைய முடியும்? 'அர்ஜுனா உன்னைப்போல் துரியோதனாதிகளுக்கு உன் விஷயத்தில் இந்தக் கருணை வரவில்லையே' என்று கேட்கலாம். அது சரியல்ல. அவர்களுக்கு வாராதபோனல் நமக்கு வரக்கூடாதா? ராஜ்ஜியம் தனக்கு ஸ்திரமாக சித்திக்க வேண்டுமென்ற பேராசையினல், அவர்கள் விவேகவிஞ்ஞானத்தைஇழந்து 'இந்த யுத்தம் நேரிட்டால் குலமே க்ஷயித்துவிடுமே. பந்துக்களைக் கொன்ருல் மஹா பாப மல்லவா வரும்' என்ற தத்வத்தை அவர்கள் அறியவில்லை. அப்படி அறியாதபோனல் போகட்டும். இவ்விதமான யுத்தத்தால் குல க்ஷயம் ஏற்படும் என்ற தத்வத்தை யறிந்த நாம் இந்த பாபத்தில் பிரவ்ருத்திக்கலாமா? குலம் என்ருல் புருஷர்கள் இருந்தால் தானே அழகாக நிலைக்கும்? குல புருஷாள் மடிந்து விட்டால் குலக்ஷய மல்லவா? துரியோதனாதிகளுடைய கக்ஷியிலுள்ள 11-அக்ஷௌஹிணி சேனையையும் நாம் வதித்துவிட்டால் அளவிடமுடியாத குல புருஷர்கள் மடிந்து விடுகிருர்களல்லவா? அத்தனை குலத்திலும் புருஷர்கள் இல்லாமல் ஸ்திரீகள் மாத்திரம் தான் மீதியாக ஏற்படும், குல புருஷர்கள் இருந்தால் ஒரு தர்மத்தை சாஸ்திரத்திற்கும். கடவுளுக்கும் பயந்து பண்ணுத போனலும், லோகத்திற்காவது ஏதாவது தர்மத்தை ஆசரிப்பார்கள்; அப்பொழுது குலத்தில் தர்ம தேவதை நிலைக்கும்; அதனல் அதர்ம தேவதை உட்பூற இடமில்லாமல் போகும். குல புருஷர்கள் எல்லாரும் நசித்து விட்டார்களேயானல், ஸ்திரீகளுக்கு தர்மத்தில் அதிகாரம் இல்லாததினல் அந்த குலத்தில் தர்மாசரணம் எப்படி நடக்கும்? தர்மாசரணம் இல்லாமலிருக்கும் பொழுது அந்த வீட்டில் தர்மதேவதையே நிலைக்கமாட்

டாள். அப்பொழுது பயமில்லாமல் அதர்மம் உட்புகுந்து விடுகிறது. அதர்மம் குலத்தில் விருத்தியடைய, ஸ்திரீகளுடைய புத்திக்கு மாறுதல் எற்பட்டு, அவர்கள் இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். (அதாவது, ஸ்திரீகள் தோஷமுள்ளவர்களாக ஆய்விடுவார்கள்.) அப்படி அந்த தோஷமுள்ள ஸ்திரீஜாதி மூலமாக 'ஸாங்கர்யம் என்ற தோஷம் ஸித்தித்து விடுகிறது. (அதாவது இன்ன ஸ்திரீ இன்ன புருஷனுடன் தான் புணரலாம் என்ற சாஸ்திர நியமம் போய் விடுகிறது.) அந்த ஸாங்கர்யம் என்ற தோஷமானது இந்த குலம் இப்படி அழிந்ததற்கு மூல புருஷாள் யாரோ, அவர்களுக்கும், இந்த குலத்திற்கும் நரகத்தையே கொடுப்பதாக ஆகிறது. இந்த குலத்திலுள்ள பித்ருக்களும், பிண்டமும், ஜலமும் இல்லாமல் நரகத்தில் விழுகிறார்கள். பிறகு இவ்விதமான தோஷங்களால் ஜாதி தர்மம் போய் விடுகிறது. சாச்வதமான குல தர்மம் போய் விடுகிறது. குல தர்மத்தையும் ஜாதி தர்மத்தையும் விட்ட பாபிகளுக்கு நரகத்தில் தான் நியதவாஸம் என்றதை சாஸ்திர மூலமாகவும், பெரியோர்கள் மூலமாகவும், கேட்டிருக்கிறோம். இப்படி இருக்கும் பொழுது, ஹே, கிருஷ்ணா! மஹத்தான பாபத்தை செய்ய நாம் துணிந்தோமல்லவா ? இதற்கு ராஜ்ஜியத்திலுள்ள பேராசை தானே காரணம் ? ஸ்வஜனங்களைக் கொல்வதைக் காட்டிலும் மேலான பாபம் வேறு உண்டா?

ஆனால் கிருஷ்ணா! நான் யுத்தம் பண்ணாமல் காண்டீவம் என்ற வில்லையும் கீழே எறிந்துவிட்டு உதாஸீனமாக இருக்கும் பொழுது, துரியோதனன் முதலானவர்கள் என்னை பலாத்காரமாக பிடித்து இழுத்து கொன்றார்களேயானால் அது எனக்கு பரம க்ஷேமமென்றே நான் கருதுகிறேன். அவர்களைக் கொன்று குலக்ஷய பாபத்தை நான் அடைவதைக் காட்டிலும் என்னுடைய மரணம் எனக்கு

நலமே. அதிலும் நான் ஆயுதபாணியாயிருந்து, சற்று நேரம் யுத்தம் பண்ணி இருந்தால் அது கூட எனக்கு நலம் இல்லை. அப்பொழுதும் குலக்ஷய பாபமானது என்னிடம் கொஞ்சம் ஒட்டுமோ என்ற ஸந்தேகம் உண்டு. வில்லைக் கீழே எறிந்துவிட்டு ஆயுதமில்லாமல் யுத்தத்தில் உபரதியடைந்த என்னை, துரியோதனாதிகள் பலாத்காரமாக பிடித்து இழுத்துக் கொன்றால், குலக்ஷய பாபமானது கொஞ்சமேனும் என்னிடம் ஏற்பட நியாயமில்லாதினால், அப்படி எனக்கு ஏற்படும் மரணத்தை நான் ஒரு பெரிய சிரேயஸ்ஸாகக் கருதுகிறேன்' என்று, அர்ஜுனன் கிருஷ்ணபரமாத்மாவிடம் சொல்லிவிட்டு, வில், பாணம், இதுகளையும் எறிந்துவிட்டு, இவ்விதமான மஹத்தான பாபத்தில் பிரவிருத்தித்தோமே என்ற துக்கத்தால் பீடிக்கப்பட்ட மனதுடையவனாக இருந்துகொண்டு ரதத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

முதல் அத்யாயம் முற்றிற்று.

## சிகையின் அவசியம்.

சிகை அவசியமா! அவசியம் தான்!

எப்படி ? சொல்கிறேன் கேள்.

இகத்திலும் பரத்திலும் சகல விதமான சிரேயஸ்ஸை யும் அடைவதற்கு கர்மயோகமே முக்யமான சாதன மாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலும் அவிவேகிகளுக்குக் கர்மயோகத்தை விட்டால் வேறு கதியேயில்லை, அப்படிக் கர்மயோ கத்தை அனுஷ்டிக்கும் அதிகாரிக்குச் சில ஸாதனங்கள் அவசியமாக இருக்கவேண்டும். அந்த சாதனங்கள் இல்லாவிடில் அவன் செய்யும் கர்மானுஷ்டானம் பிரயோஜன மற்றதாகவே ஆகும். அந்த சாதனங்களோ, தர்மபத்னி, சத்புத்ரன், ஞாயமாக சம்பாதிக்கப் பட்ட பொருள், சிகை, யக்ஞோபவீதம், முதலானவைகளேயாகும். இவைகளுள் சிகை என்பது ரொம்பவும் முக்ய சாதனமாக ஆகும். மனிதனுடைய ஒவ்வொரு அங்கங்களிலும் தேவதைகள் வசிக்கின் றார்கள் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதை அனுசரித்து மனிதனுடைய சிகையில் பிதிர் தேவதைகள் வசிக்கின்றார்கள். சிகையை எடுத்துவிடுகிற மனிதன் பிதிர் தேவதை களை ஹத்திபண்ணின மஹா பாதகத்திற்கு ஆளாக ஆகிறான்.

ஒரு மண் பானையில் ஜலத்தை வைத்திருக்கும் பொழுது அந்தப் பானையை உடைத்துவிட்டால் அதிலுள்ள ஜலங்கள் சிதறிப்போவது போல சிகையில் பிதிர் தேவதைகளிருக்கிறபடியால் அந்த சிகையை அழிக்கும்பொழுது பிதிர் தேவதைகளும் அழிந்தே போய் விடுகிறார் கள். அந்தப் பிதிர் தேவதைகளுடைய சாபமும் சிகையை அழித்த

வனுடைய குடும்பத்தில் ஏற்பட்டுக் குடும்பத்தினுடைய அபிவிர்த்தி ஏற்படாமல் பல வியாதிகளாலும் அந்தக் குடும்பத்தார் பீடிக்கப் படுகிருர்கள் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. சாஸ்திரத்தை நம் பாத நாஸ்திகர்களுக்கு இது பரிகாஸ ஆஸ்பதமாக ஆகக்கூடும். ஆனல் அது அந்த நாஸ்திகர்களுடைய மூடத்தன்மையைத் தான் வெளியாக்கும். அந்த நாஸ்திகர்களும் எல்லாவற்றிலும் சாஸ்திரத் தை நம்ப முடியவில்லை என்று சொல்ல முடியாது. அவர்களும் சில விஷயங்களில் சாஸ்திரத்தை நம்பித்தான் விவகாரங்கள் செய்ய வேண்டும்; அழகான கை, கால்களும், முகமும் உள்ள ஒரு பொம் மையின் சரீரத்தை காட்டிலும் மனுஷ்ய சரீரத்திற்கு ஒரு வை லக்ஷண்யத்தை அந்த நாஸ்திகர்களும் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். அப்படி ஒப்புக்கொள்ளாத போனல் பொம்மையைப் போலத் தானே தாமும் இருக்கும்படி நேரிடும். அதற்கு அவர்கள சம்மதிப்பார்களா? சம்மதிக்கமாட்டார்கள்.

ஆகையால் பொம்மையின் சரீரத்தைக் காட்டிலும் தமது சரீரத்தில் ஒரு விலக்ஷணத்தன்மையை ஒப்புக்கொண்டு தான் தீர வேண்டும். அந்த விலக்ஷணத்தன்மையும் சைதன்யம் தான் என் றும் சொல்லவேண்டும். அந்த சைதன்யத்தை அந்த நாஸ்திகர்கள் பிரத்யக்ஷமாகப் பார்க்கிருர்களா? சாஸ்திரத்தை நம்பித்தானே அந்த சைதன்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். சாஸ்திரத்தை விட்டு அனுமானம் முதலான பிரமாணங்களாலும் அந்த சைதன் யத்தை நாஸ்திகர்களால் ஸாதிக்க முடியாது. அனுமானத்திற்குத் திருஷ்டாந்தம் வேண்டாமா? சைதன்யத்தை ஸாதிக்கிற விஷயத் தில் ஜடம் திருஷ்டாந்தமாக ஆகாது. வேறு பிரத்யக்ஷமான சை தன்யமும் இல்லை. இப்படி திருஷ்டாந்தம் இல்லாமலிருக்கும் பொழுது அனுமானம் முதலான பிரமாணங்களுக்கு அவகாசமே

இராது. ஆகையால் பொம்மையின் சரீரத்தைக் காட்டிலும் விலக்ஷணமான மனித சரீரத்திற்கு சைதன்யத்தை ஸாதிப்பதில் நாஸ்திகர்களும் சாஸ்திரத்தையே சரணமடையவேண்டும்.

அது போலவே, சிகையின் விஷயத்திலும் அவர்கள் என் சாஸ்திரத்தை நம்பக் கூடாது? நம்பித்தான் ஆகவேண்டும். அப்படி அவர்கள் நம்பாத போனாலும் அவர்களைப்போல் நாமும் அந்த சாஸ்திரத்தை நம்பாத நிலைமையிலிருந்துகொண்டு சிகை யிருக்கவேண்டியது அவசியமா? இல்லையா? என்பதை விசாரிக்கவும் அவசியம் என்றே சொல்ல வேண்டும். ஒரு மனிதனுக்குக் கை, கால்கள், அவசியம் என்று நினைத்து அவைகளை இல்லாமல் செய்தால் அவனுடைய சரீரம் அழகாகத் தோன்றுமா? அது போல சிகையும் மனிதனுக்கு ஒரு அலங்காரமான அவயவத்திற் சேர்ந்ததல்லவா? அந்த சிகை என்பது அலங்காரமான ஒரு அவயவம் என்பதை ஸ்திரீ ஜாதிகளிடம் பிரத்யக்ஷமாக அனுபவிக்கின்றோம். அந்த அவயவத்தை யில்லாமற் செய்து விட்டால் அந்த மனிதனுக்கு ஒரு அலங்காரமான அவயவம் போய் விட்டபடியால் அவனுக்கு சௌந்தர்யமே போய்விடுமல்லவா? மிலேச்சனுக்கும் அவனுக்கும் வேற்றுமை எப்படி சித்திக்கும்? இந்து மதத்திற்கு நேர் விரோதமுள்ள முஸ்லீம் முதலிய மதத்தில் தலையில் சிகை கூடாது என்று கொரு னில் சொல்லியிருப்பது ஒன்றே, இந்து மதத்திற்குத் தலையிலுள்ள சிகை தான் இவன் இந்து என்றதற்கு முக்யமான அடையாளமாக ஆகும் என்றதில் பிரமாணமாக ஆகிறது.

தன் மதத்திற்குரிய அடையாளத்தை இல்லாமற் செய்து கொண்டு விட்டால் தான் அந்த மதத்தில் உள்ளவன் என்று வெளியில் எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்? மற்ற மதஸ்தர்கள் தன்

மதத்திற்குரிய முக்யமான அடையாளங்களை அழித்துக்கொள்கிறார்களா? விருத்தி செய்து வருகிறார்களா? என்பதைப் பார்த்தாவது இந்து மதத்தில் சேர்ந்தவர்களுக்குத் தன் மதத்திற்குரிய முக்யமான அடையாளமாகிய சிகையில் நம்பிக்கை வரவேண்டாமா? ஒரு நியாயஸ்தலத்தில் நியாயாதிபதியினுடைய சேவகனுக்கு மார்ப் பட்டாவும் அதில் ஒரு வில்லையும் இன்ன அதிகாரி என்ற எழுத்துக்களும் ஒரு அடையாளமாக ஏற்பட்டிருக்கிறதல்லவா? அந்த சேவகனும் அந்த அடையாளத்தைத் தனது சரீரத்தில் அலங்காரமாகச் செய்துகொண்டு நியாயாதிபதியினுடைய அருகில் நின்றால் தானே அந்த நியாயாதிபதிக்கும் ஒரு பெருமை சித்திக்கும். அந்த சேவகனுக்கும் இவன் நியாயாதிபதியைச் சேர்ந்தவன் என்ற கௌரவமும் ஏற்படும். அந்த அலங்காரத்தைச் செய்து கொள்ளாமல் நின்றால் அவனையோ அந்த நியாயாதிபதியையோ யாரும் மதிக்க மாட்டார்கள். அந்த சேவகனுக்கும் அந்த நியாயாதிபதியினிடத்தில் நம்பிக்கையும் கௌரவ புத்தியுமில்லை என்பது திண்ணம்.

(தொடரும்.)

## விளம்பரம்.

---

மதுரை மேலக்கோபுரத் தெரு, K. சோமசுந்தர மய்யரவர்களை 1933 அக்டோபர் மீ 20 உ முதல் ஸன்மார்க்க ப்ரதர்சினி, விற்பதற்கும் சந்தாதார்கள் சேர்ப்பதற்கும் மதுரை ராமனுதபுரம் ஜில்லாக்களுக்கு ஏஜன்டாக நியமித்திருப்பதால் சந்தாதார்கள் ஷை யாரிடம் சந்தாவை செலுத்தி ரசீதும் புஸ்தகமும் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்:-

ஸன்மார்க்க ப்ரதர்ஸினி ஆபீஸ்,

மதுரை.

தேவை! தேவை!!

எல்லா ஊர்களிலும்

**ஸன்மார்கப்ரதர்சினி.**

விற்பதற்கும், சந்தாதார்கள் சேர்ப்பதற்கும்

## ஏஜெண்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் தக்கூடும்.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்;—

மானேஜர்,

"ஸன்மார்க ப்ரதர்சினி ஆபீஸ்"

14, வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# வெங்கடேஸ்வர் பிரஸ்,



24, காக்காத்தோப்புத் தெரு,

மதுரை.

எமது அச்சாபீஸில் உயர்தர அச்சுவேலைகள் பைண்டு வேலைகள், அழகாயும், சுத்தமாயும், குறித்த நேரத்தில், குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

ஒரு முறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

## நமது சொந்த ப்ரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ப்ரம்ம ஸூத்ர வ்ருத்தி | அச்சில் | 2—0—0 |
| 2. | மனீஷா பஞ்சகம் | ,, | 1—0—0 |
| 3. | துவைதாத்வைத விசாரம் | | 0—4—0 |
| 4, | பகவத்கீதா ஸாரம் | | 0—2—0 |

மேல்கண்ட காபிகள் வேண்டுவோர் அதன் விலையுள்ள தபால் பில்லைகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பினால் காபிகள் அனுப்பப்படும்.

மானேஜர்,

ஸன்மார்க்க ப்ரதர்சினீ ஆபீஸ்:

14, வடக்குசித்திரை வீதி, மதுரை.

இனாம்! உ இனாம்!!

எத்தனைபேர்கள் சரியான விடைகள் அனுப்புகிறார்களோ, அவர்களுக்கு ஒரு வருட 'ஸன்மார்க்கப்ரதர்சினீ', சஞ்சிகைகள் இனாம்.

பிரவேசக்கட்டணமேயில்லை.

# போட்டிப் பந்தயம் (1)

கீழே அச்சிடப் பட்டிருக்கும் 8 வரிகளில் ஒவ்வொரு வரியிலும், ஒரு பெயர்ச் சொற்களின் எழுத்துக்கள் மாற்றிப் போடப் பட்டிருக்கின்றன. அவைகளுக்கு விடைகளைக் கண்டு பிடித்து கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்பவேண்டும். எத்தனை விடைகள் அனுப்பித்தாலும், ஒவ்வொரு விடையும் கீழே அச்சிடப்பட்டிருக்கும் கூப்பனில் தான் எழுதியனுப்ப வேண்டும். விடைகூபன்கள் நவம்பர் ௴ 20வுக்குள் அனுப்ப வேண்டும். ஒரு தப்புள்ள விடைகளுக்கும் 6 ௴ சஞ்சிகை யனுப்பப்படும். பரிசு விபரமும், சரியான விடையும், டிசம்பர் பத்திரிகையில் வெளி வரும்.

விடைகண்டுபிடிக்கும் விதம்:

முதல்வரி: ட்ந்ன்புதகாடி.

விடை: புட்டி காந்தன்.

---

விடைகூபன்

| | |
|---|---|
| 1. ட்ந்ன்புதகாடி | 1. புட்டி காந்தன் |
| 2. ன்சோருமதசு | 2. ................................ |
| 3. ளியைள அகையா | 3. ................................ |
| 4. க்ன்வாகுடுடகோ | 4. ................................ |
| 5. ன்ரமாககு | 5. ................................ |
| 6. நர்ஸ்மாதகஸோ | 6. ................................ |
| 7. புமரிதா | 7. ................................ |
| 8. ற்ர்ரிரி அகயாயய | 8. ................................ |

---

ஆசிரியர் தீர்ப்பே முடிவென்று ஒப்புக் கொள்கிறேன்.

கையெழுத்து; ................................

விலாஸம்: ................................

................................

---

விடைகள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு அனுப்பவும்:

ஆசிரியர், போட்டிப் பந்தயம் (1)

14. வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

உ

## மீனாக்ஷி வைத்ய சாலை.

46, மேலக்கோபுரத் தெரு, மதுரை.

எனது தாயார் டாக்டர் மீனாக்ஷி அம்மாள் அவர்களால் தயாரிக்கப்பட்டு வெகுகாலமாக அனுபவத்திலிருந்தும் தற்காலத்திலும் கியாதி அடைந்ததுமான அடியில்கண்ட மருந்துகள் என்னிடம் கிடைக்கும். மற்ற விபரம் நேரிலும் லெட்டர் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

1. ஸர்வரோக நிவாரணி ஸ்நான தைலம் 2 அவுன்ஸ் 0-5-0
2. ஸர்வ செவிரோக நிவாரணி தைலம் 1 அவுன்ஸ் 0-8-0
3. லிங்காஷ்டக மாத்திரை 25, C-8-0
4. படைசம்ஹாரி 1 அவுன்ஸ் 0-12-0

**K.** சோமசுந்தரமய்யர்,
மானேஜர்.

தேவை! தேவை!!

எல்லா ஊர்களிலும்

# ஆத்மரக்ஷா,

விற்பதற்கும், சந்தாதார்கள் சேர்ப்பதற்கும்

# ஏஜெண்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் தரக்கூடும்.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்,—

எடிட்டர்,
ஆத்மரக்ஷா
தன்வந்தரம் தேவாரம்,
மதுரை ஜில்லா.

# …மார்க ப்ரதர்சினீ"

## மதுரை.

(ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.)

### சந்தா விகிதம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 1—0—0 |
| 6 மாத சந்தா | ரூ. | 0--12—0 |
| தனிப் பிரதி | ரூ. | 0—2—0 |
| வெளியூர்களுக்கு வருஷசந்தா | ரூ. | 1—6—0 |

சந்தாதார்களுக்கு சேர்ந்த வருஷத் துவக்கத்திலிருந்து தான் சஞ்சிகை அனுப்பப்படும்.

1. சந்தாத் தொகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2. விலாஸ மாறுதல்களுக்கு, சந்தா எண்ணைக்குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்குவரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் செலவு அனுப்ப வேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ராப்பர் முழுப்பக்கம் | ரூ. | 5—0—0 |
| தடவை 1-க்கு முழுப் பக்கத்திற்கு | ரூ. | 3—0—0 |
| ,, அரை பக்கத்திற்கு | ரூ. | 2—0—0 |
| ,, கால் பக்கத்திற்கு | ரூ. | 1—0—0 |

மானேஜர்,

"ஸன்மார்க்க ப்ரதர்சினீ" ஆபீஸ்.

14, வடக்குச்சித்திரை வீதி,

மதுரை.

குறிப்பு:—1. மற்ற விபரங்களுக்கு கடிதம் எழுதவும்.

2. சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத விளம்பரங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

Printed at the Venkateswar Press, Kakatope st, Madura.